ஸ்ரீ:

॥ ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம: ॥

# வேதாந்த தீபிகை.

ஸம்பாதகர்:—ஸ்ரீ வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 20.] சுக்லஹூ ஐப்பிசிமீ [ஸஞ்சிகை 1.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே ।
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥

[ஸ்ரீ பாகவதம். 1-9-33]

## ஸ்ரீமத் அதிகரண ஸாராவளி.

[ஸ்ரீ உப. வித்வாந் ஏ. வி. கோபாலாசார்யர், திருச்சி.]

(ஸம்புடம் 19, ஸஞ்சிகை 9, பக்கம் 243 தொடர்ச்சி.)

"த்ரய்யந்தத்வாந்தவாதிப்ரதிகரணமணே வர்ணநா த்ரய்யாசார்யை:
உத்கோபாஸ்ருத்ததேவ விஸ்மயமமுதாம் மந்தபாக்யஸ்ய மந்யே ।
தீர்கோபாஸேஷா ஸஹீநா ப்ரகரகிரணஸ்ரேணிகேவாஜிஹாநா
ஸாரஸ்யா பத்யாவஸ்யம் ஸாதயதுமதா ஸர்வதாநாதிநோதா: ॥"

வேதாந்தாசார்ய ரென்கிற பெரிய பெருமான் அளித்த பிருது இந்த க்ரந்தம் செய்வதால் எப்படி அந்வர்த்தமாகும்? ப்ரஸ்தாவித்து வரும் ஸத்வித்யையில் ஒருவன் மற்றொருவனது கண்ணைக் கட்டி அவனை வேறு ஊரிற் கொண்டுபோய்க் கட்டை அவிழ்த்து விட்டால் அவன் எப்படித் தன்னூருக்கு வரும் திக்குத் தெரியாமல், வழி தெரிந்தவர்களிடம் வழியைக் கேட்டுக்கொண்டு தனக்கு அபிமதமான தன் தேசத்துக்குப் போய்ச் சேருவானோ, அப்படியே ப்ராஹ்மத்தை அடைய வழி தெரியாமல் திக்ப்ரமம் பிடித்துத் திகைப்பவருக்கு வழியைக் காட்டுகிறவன் ஆசார்யன் என்று

சொல்லப்பட்டுள்ளது. வேதாந்தக் காடுகளில் பலவிதமான ஸம்சயங்கள் பரஸ்பரம் விரோதம் போல் காணும். உக்திகள் முதலியவற்ருல் இன்ன வழியை (அதாவது திக்கை) ஆச்ரயிக்கிறது என்று தெரியாமல் திகைத்த வர்களின் ஸம்சயங்களை நிவர்த்தித்து சரியான திக்கை (அதாவது வழியை) இந்த க்ரந்தத்தால் உண்டாகும் ஸூர்யோதயம் போன்ற வெளிச்சம் காட்டிக்கொடுக்கும். இதனுல் ஸத்வித்யையில் சொல்லப்பட்ட ஆசார்ய க்ருத்ய மான திக்கைக் காட்டும் குணம் இந்த க்ரந்தத்திற்கு உண்டாதலால் இதன் நிர்மாணத்தால் வேதாந்தாசார்யத்வம் நிலைக்கும் என்கிருர். இதற்கு இன்னெரு ப்ரகாரமாயும் அவதாரிகை வைக்கலாம். முன் ச்லோகத்தில் இந்த க்ரந்தம் பரமபத மார்க்கமாகிய அர்ச்சிராதி மார்க்கத்தில் எதிர்கொண்டுவரும் மாலாஹஸ்தைகளான ஸ்ரக்தரைகள் என்றுமுடிவில் உரைக்கப்பட்டது. பரம பதத்திற்கு ஸமீபத்தில் அல்லவா அவர்கள் எதிர்கொண்டு வருவது. இங்கிருந்து அவ்விடம் போய்ச் சேரும்படியான உபகாரத்தை யார் செய்வார்? இப்படி வருகிற சங்கைக்கு இந்த க்ரந்தமே இங்கிருந்து கொண்டுபோக ஏணியாகுமென்கிருர். ச்ரேணிகை யென்பது நிச்ரேணிகையான ஏணியையும் சொல்லும். இந்த க்ரந்தம் முடிவில் இது முக்தி நிச்ரேணிகை யென்று ஸ்வாமியே நாமகரணம் செய்கிருர். அர்ச்சிராதி மார்க்கம் ஒரு ஏணியாகும். "ஏற்றி வைத்து ஏணிவாங்கி" என்று பெரியோர்கள் பாசுரம்; பரமபத ஸோபாநமென்றும் வ்யவஹாரம். அந்த ஏணியில் கஸ்ரம் என்கிற ஸூர்ய கிரணம் இரண்டாவது படியாகும். ஸூர்ய கிரணம் நாம் இருக்குமிடம் வரையில் பரவி உளது. அது நம்மைத் தொட்டுக்கொண்டிருக்கிறது. நாமிருக்கு மிடத்திலிருந்தே நம்மை அது மேலே கொண்டுபோகக் கூடும். இப்படிக்கொத்த ஏணியாகுமென்பதைக் காட்ட திநகர கிரண ச்ரேணிகை போல இந்த க்ரந்தப் பாசுரங்கள் வெளிச்சத்தைக் கொடுத்து வழி காட்டும் என்று கூறுகிருர். முதல் படியாகிய அக்நியின் ஸ்பர்சத்தைச் சொல்லுவது பயத்தைக் கொடுக்ககூடியதால் அழகாயிராது. இரண்டாவது படியாகிய ஸூர்ய கிரணம் வெளிச்சத்தைக் கொடுத்துத் திக்கைக் காட்டுவது மன்றியில் இங்கிருந்து மேலே வெகுதூரம் ஒரே ஏணி போல் இருப்பதாலும் அந்தப் பர்வமாக ரூபணம் செய்கிருர்.

முக்தியை முடிவில்லாத ஒரே பகல் என்று உபநிஷத்து சொல்லிற்று. அதை அநுஸரித்து இங்கே திநகர சப்தம். அந்த ஒரே பகலான திநத்தைச் செய்வது இந்த கிரணமாகிய ஏணி. திக்குத் தெரியாமல் மோஹத்தால் வருந்துவோரை ஜ்ஞாந வெளிச்சத்தைக் கொடுத்து வழி காட்டிச் சேருமிடம் சேர்க்கும் இந்த ஸூர்ய

கிரண ச்ரேணிகை. இந்தக் கிரணம் ஆத்மா இருக்குமிடமான நம்முடைய ஹ்ருதயத்தையே அடைந்திருக்கிறது. அதை எட்டிப் பிடிக்கத் தேவையில்லை என்பதைக் காட்ட '**ஹ்ருதயங்கமிதா**' என்று கூறப்பட்டது. இந்தப் பாசுர மாலையை எப்பொழுதும் ஹ்ருதயத்துக்கு அலங்காரமாகத் தரிக்கவேணும். ஜப மாலையைத் தரிப்பதுபோல் இதை ஹ்ருதயத்தில் தரித்து ஆவர்த்தநம் செய்யவேணும். இதுதான் ஹ்ருதய தேசத்தை அலங்கரிக்க யோக்யமானது. இந்த மாலை ஹ்ருத்யமானது; இதைத் தரிப்பது ஹ்ருதயத்துக்கு இனிப்பானது. '**ஸ்வஹ்ருத்யை:**' என்று பெரிய பெருமாளுக்கும் இந்தப் பத்யங்கள் ஹ்ருத்யமாகும். கீதாரம்பத்தில் கார்ப்பண்யமும் மோஹமும் மூடிக்கொள்ளவே அர்ஜுநன் அவை தீரக் கண்ணனை ஆசார்யனாக ப்ரபதநம் செய்கிறான். அதுபோல் இங்கே கார்ப்பண்யத்தைச் சொல்லும் '**தீந** மோஹ க்ஷேப' சப்தங்கள் '**ஸம்மூடசேதா:**' என்கிற அர்ஜுநன் வார்த்தையை அநுவதிக்கின்றன. '**உஜ்ஜிஹாநா**' என்பது கிளம்புகிறது என்கிற உதயத்தைச் சொல்லும். இவராசார்யர் வேதாந்தோதயநர், இந்த க்ரந்தமும் வேதாந்தோதயநமாகும். சிஷ்யர்களுக் குண்டாகும் ஸகல சங்கைகளையும் பிறர் செய்யும் ஆக்ஷேபங்களையும் தினவுகெடத் தீர்த்துத் தெளிவை உண்டுபண்ணுவது இந்த க்ரந்தத்தின் கார்யம். ஸ்ரீ என்னென்ன உபகாரங்களைச் செய்கிறதென்று முன் பாதியில் கூறுகிறார்.

வேதாந்தாசார்ய னென்கிற பெயரை ஸார்த்தகமாகச் செய்வது ப்ரக்ருதமாகையால் '**த்ரய்யந்த**' என்று ச்லோகம் ஆரம்பிக்கப்படுகிறது. அதில் '**த்ரயீ**' என்கிற சப்தத்தினால் வேதாந்த பாகங்களான எல்லா உபநிஷத்துக்களையும் சேர்த்துப் பார்த்து ஒரே மஹா வாக்யமாகச் செய்து அகண்டமாக ஏற்படும் தாத்பர்யத்தை உரைப்பது ஸூத்ரகாரருடைய அதிகரணமாலை என்று பாவம். ஸகல வேதாந்தங்களின் ஸ்வாந்தமாகிய ஹ்ருதயத்தை வெளியிடுவது ஸூத்ரகாரருடைய அதிகரணங்கள். வேதாந்தங்களின் ஹ்ருதயம் ஸூத்ரகாரர் ஹ்ருதயத்தில் புகுந்து அதிகரணங்களாக வெளிப்பட்டது. அந்த அதிகரணங்களின் தாத்பர்யம் இன்னதென்று மறுபடியும் விவாதம் வர வ்யாஸருடைய ஹ்ருதயம் யதிபதி ஹ்ருதயத்தில் ஏறிக்கொண்டதாக க்ரந்த முடிவில் கூறுகிறார். யதிபதி ஹ்ருதயத்தில் ஏறிக்கொண்ட வ்யாஸ ஹ்ருதயத்தை இந்த க்ரந்தம் வெளியிடுகிறது என்று முடிவில் கூறுவதை ஒட்டி இங்கே ஆரம்பத்தில் ஹ்ருதயத்தைச் சொல்லும் '**ஸ்வாந்த**' சப்தம். 'ஸூத்ரத்தின் ஹ்ருதயம் வேறு. வேதாந்தங்களின் ஹ்ருதயம் வேறு; இரண்டுக்கும் விரோதம் காணுமிடத்தில் மூலமாகிய வேதாந்தங்களின் ஹ்ருதயத்தை ஆத

ரிப்போம். மூலத்துக்கு விரோதமான வ்யாக்யானமான ஸூத்ரத்தை அந்யாய மென்று தள்ளுவோம்' என்று ஆநந்தமயாதிகரணத்தில் அத்வைத பாஷ்யத்தை அநுஸரித்து கல்பதருவில் ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கிறது. அப்படிப்போல் அல்லாமல் வேதாந்தங்களின் ஹ்ருதயத்தையே ஸூத்ரகாரருடைய அதிகரணங்கள் வெளியிடுகின்றன என்பதைக் காட்ட முதலிரண்டு பதங்களும் ப்ரயோகிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த அதிகரணங்களில் பௌநருக்த்யம் முதலிய தோஷங்கள் தட்டுவதையெல்லாம் இந்த க்ரந்தம் பரிஹரித்துச் சரியான வழியைக் காட்டும். சொல்லப்படும் புநருக்தி முதலிய தோஷங்கள் இந்தச் சாரீரக் சாஸ்த்ரத்திற்குள்ளிருந்தே சொல்லக்கூடிய ஆக்ஷேபங்களாக இருக்கவேண்டு மென்கிற நிர்ப்பந்தமில்லை. ஜைமிநியின் பன்னிரண்டு அத்யாயங்களும் சேர்ந்த இருபது அத்யாயம் மீமாம்ஸையும் ஒரே சாஸ்த்ரம் என்று சொல்லுகிற நாம் பூர்வ தந்த்ரத்திற்கும் சாரீரகத்துக்கும் வரும் பௌநருக்த்யம் முதலிய தோஷங்களைப் பரிஹரிக்கவேண்டியதுதான். சாஸ்த்ரம் ஒன்றே என்பதை ஒப்புக்கொள்ளாத ஸ்ரீசங்கராசார்யரும் “ஏக ஆத்மந꞉ ஶரீரே பாவாத்” என்கிற அதிகரணாரம்பத்தில், பூர்வ தந்த்ரத்தில் இந்த விஷயம் தீர்மானிக்கப்பட்டிருந்தும் இங்கே ஏன் புநருக்தமாய்ச்சொல்லப்படுகிறது என்று ஆக்ஷேபம்செய்து, ஜைமிநியாகிய ஸூத்ரகாரரால் அந்த விஷயம் ஸூத்ரங்களால் சொல்லப்படாததாலும் அந்த ஸூத்ரங்களுக்கு பாஷ்யகாரரான சபர ஸ்வாமியால் மட்டும் அது சொல்லப்பட்டதாலும் புநருக்த தோஷம் இல்லை என்று பரிஹரித்தார். சாஸ்த்ர பேதம் சொல்பவரே பூர்வ சாஸ்த்ரத்தைக் கொண்டு பௌநருக்த்யாக்ஷேபம் செய்து பரிஹரிக்கும்பொழுது, சாஸ்த்ரம் ஒன்றே என்று கொள்ளும் நாம், பூர்வ தந்த்ரத்தில் சொன்னதைக் கொண்டு இங்கே திருப்பிச் சொன்னால் ஏன் திருப்பிச் சொல்லுகிறார் என்று ஆக்ஷேபத்தைக் கிளப்பக் கூடாதென்றும், இந்த சாரீரகத்திற்குள்ளேயே திருப்பிச் சொல்லுதல் முதலிய ஆக்ஷேப விஷயமாக இந்த ச்லோகத்திற்கு அர்த்தம் செய்யவேணுமென்றும் நிர்ப்பந்தம் சொல்வது உசிதமாகத் தோன்றவில்லை. சிந்தாமணியில் பூர்வ தந்த்ரத்தையும் சேர்த்து ஒரே சாஸ்த்ரமாக வைத்து இந்த தோஷ சங்கைகளுக்கு த்ருஷ்டாந்தங்கள் கூறி இருப்பதுடன் மூலத்தினாலேயே இது ஸ்பஷ்டமாய்த் தெரிகிறது. அநேக இடங்களில் மூலத்திலேயே பூர்வ தந்த்ரத்தில் சொல்லுவதை உத்தேசித்து இவ்வித ஆக்ஷேபங்கள் செய்யப்பட்டுப் பரிஹரிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது அத்யாயத்தில் முதல் பாதத்தின் முதல் அதிகரணமாகிய ஸ்ம்ருத்யதிகரணத்திற்கு, முன்பு கர்ம காண்டத்தில் ச்ருதிகளுக்கும் ஸ்ம்ருதிக்கும் ந்யாயத்திற்கும் விரோதம் வந்தால் அவ்விரண்டையும்

கொண்டு ச்ருதியை அசைக்கமுடியாது என்று தீர்மானித்திருக்க மறுபடியும் அதையே ஸாதிப்பதற்கு இந்தப் பாதம் முழுவதும் புநருக்தம் தானே என்று ஆக்ஷேபித்து அதற்கு ஸமாதாநம் ஸாதிக்கிறார். இப்படியே பூர்வ காண்டத்தில் அர்த்தவாதாதிகரணத்தின் தீர்மானத்திற்கு இங்கே ஸமந்வயாதிகரணத்தின் ப்ரும்ம விஷயமான அர்த்தவாத வாக்யங்களுக்கு ஸ்வதந்த்ரமாய் விதிசேஷமன்றியில் ப்ராமாண்யம் சொல்லுவது விரோதமாவதால் பூர்வோக்தத்திற்குப் பாதம் வருகிறது என்று ஆக்ஷேபம் செய்யப்படுகிறது. ஆகையால் மூலத்தின் சைலியை அநுஸரித்து முன் சாஸ்த்ரத்தைக் கொண்டும் இந்தச் சாஸ்த்ரத்துக்குள்ளேயும் திரும்பிச் சொல்லுதல், சொன்னதை மாற்றுதல் முதலிய ஆக்ஷேபங்கள் செய்து பரிஹரிப்பதாக அர்த்தம் கொள்வது உசிதம்.

என்னென்ன சங்கைகள் அநுவதித்து ஸமாதாநம் செய்யப்படுகிற தென்பதைக் கூறுகிறார். அந்த சங்கைகள் பௌநருக்த்யம், உக்தபாதம், மந்தத்வம், அஸங்கதத்வம், விசயம், அபலத்வம், மாநபாதம் என்று ஏழாகக் கூறப்பட்டன. இந்த சங்கைகள் சில சேர்ந்து ஒரே இடத்தில் வரும், தனியாகவும் வரக்கூடும். பௌநருக்த்யமென்கிற திருப்பிச் சொல்லும் சங்கை அநேக இடங்களில் கிளப்பி பரிஹரிக்கப்படுகிறது. 14-வது ச்லோகத்தில் "**𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌪𑍌𑌨𑌰𑍁𑌕𑍍𑌤𑍍𑌯 [illegible]**" என்று ஸ்பஷ்டமாய் பூரா சாஸ்த்ரத்திலும் பௌநருக்த்யாதி பரிஹாரங்கள் ஸாவதாநர்களால் கவனிக்கத் தக்கது என்று கூறினர். முன் காண்டத்தில் விரோதாதிகரணத்தில் ச்ருதி ஸ்ம்ருதிகளுக்குள் விரோதம் வருகையில் ஸ்ம்ருதியைத் தள்ளி ச்ருதியை ஆதரிக்கவேண்டும் என்கிற தீர்மானத்தை ச்ருதிகளுடைய ப்ருஹ்ம விஷயமான துரூஹமான அபிப்ராயங்களை ஸ்மார்த்தர்களான மஹர்ஷிகளுடைய உபப்ரும்ஹணங்களான ஸ்ம்ருதிகளைக் கொண்டுதான் அறியவேண்டுமே தவிர நாம் ஸ்வதந்த்ரமாக அறியமுடியாது; ஸ்ம்ருதிகளைக்கொண்டு தான் ச்ருதி தாத்பர்யத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று மறுபடியும் ஆக்ஷேபித்து ஸ்ம்ருதிகளுக்குள்ளும் ஒன்றுக்கொன்று விரோதப்படுவதாலும் அநேக ஸ்ம்ருதிகள் ப்ரும்ம விஷயமாகச் சொல்லுவதை அநுஸரிப்பது உசிதமென்றும் ச்ருதி வாக்யங்களுக்கு நமக்குப் புலப்படும் அர்த்தங்களை அநுஸரிக்கும் அநேக ஸ்ம்ருதிகளை நாம் ஆதரிக்கவேண்டுமென்றும் ஸ்ம்ருத்யதிகரணத்தில் தீர்மானிக்கப்பட்டது. பூர்வ காண்டத்தில் தீர்மானித்ததை ஆக்ஷேபித்து இங்கே மறுபடியும் ஸ்தாபநம் செய்ததால் திருப்பிச் சொல்லும் தோஷமில்லை என்று பரிஹாரம். இது முதலில் சொல்லப்

பட்ட பௌநருக்த்ய ஆக்ஷேப பரிஹாரத்திற்கு த்ருஷ்டாந்தமாகும். பூர்வ காண்டத்தில் அர்த்தவாதாதிகரணத்தில் அர்த்தவாத ஸாமாந்யத்திற்கு ஸ்வதந்த்ரமாக ப்ராமாண்யமில்லை என்றும் விதிக்கு சேஷமாகத்தான் அவைகளுக்குப் ப்ராமாண்ய மென்றும் கூறப்பட்டது. ப்ரம்ம ஸ்வரூப விஷயமான உபநிஷத்துக்களாகிய அர்த்தவாத வாக்யங்களுக்கு க்ரியாசேஷ மன்றியில் ஸ்வதந்த்ரமாக ப்ராமாண்யத்தை ஸமந்வயாதிகரணத்தில் ஸாதிப்பது முன் தீர்மாநத்துக்குப் பாதகமல்லவா என்று உக்தபாதம் என்கிற ஆக்ஷேபம் வருகிறது. முன்பு ஸாமாந்யமாக உத்ஸர்க்க மென்கிற ஸாமாந்ய வசநம் சொல்லப்பட்டது. ப்ரும்ம ஸ்வரூப விஷயமான அர்த்தவாத வாக்ய விசேஷங்கள் அந்த உத்ஸர்க்கத்திற்கு அபவாதமாகும். இந்த வாக்யங்கள் தவிர மற்ற அர்த்தவாத வாக்யங்களைப் பற்றியது முன் சொன்ன ஸாமாந்ய வசநம். உத்ஸர்க்காபவாதங்களைச் சொல்லி சாஸ்த்ரங்களில் சோதநம் செய்வது வழக்கம். இங்கே அபவாதம் சொல்வதனுல் உக்தபாத தோஷம் வராது. இந்த ஆக்ஷேபஸமாதாநங்கள் ஸமந்வயாதிகரணத்தில் ஐம்பதாவது ச்லோகத்தில் காட்டப்பட்டன. "ப்ரயோஜநவத்த்வாத் ஸ்துதிவசநவத: ஸ்வார்த்தவித: ப்ரமிதாநீம் ஸ்வார்த்தஜ்ஞாந ப்ரமாணீக்ரியத இதி தத: காண்டயோஸ்ஸாம்யமேவ । ந ஸார்த்தக்ய ஸாமாந்யதோஹி ப்ரமஸஹிதயே ஸாதகஸ்வவசநாயம் கேவலம் ப்ரஸ்வாயஸந்தோகாஸ்வத இஹ ஸம்ஹரே பொயஸாக்ராக வசயே"

ப்ரும்ம ஸ்வரூப விஷயவாக்யங்கள், ஸ்வயம் ப்ரயோஜநமாயும் தெரிந்ததால் மட்டுமே ஆநந்தமயமாயும் உள்ள ஒரு வஸ்துவைத் தெரிவிப்பதால் ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி ரூபமான கார்யங்களைத் தெரிவித்தால்தான் ப்ரயோஜநமிருக்குமென்கிற அர்த்தவாதாதிகரண ஆக்ஷேபம் இந்த அர்த்தவாத விசேஷங்களில் ஒட்டுகிறதில்லை என்று பரிஹாரம். மந்தத்வம் என்பது அதிகரண சங்கை நிரம்பவும் குறைவாயிருந்து ஸந்தேஹத்திற்கு அதிக இடமில்லாமையைச் சொல்லும். சங்கையைத் தீர்த்துப் புத்திக்குத் தெளிவை உண்டுபண்ணுவது அதிகரண கார்யம். இரண்டாவது அத்யாயத்தின் நாலாவது பாதம் முழுவதும் இந்தத் தோஷத்திற்கும் ப்ரயோஜனமில்லாமை என்கிற அபலத்வ தோஷத்திற்கும் உட்பட்டதென்று அந்தப் பாதத்தின் ஆரம்பத்தில் சங்கித்துப் பரிஹரிக்கிருர். ஆகாசாதிகளான அசித் தத்வங்களுக்கு ப்ரஹ்மத்தினிடத்திலிருந்து உத்பத்தியை முன் பாதத்தில் தீர்மானித்திருக்க, இந்த்ரியங்களுக்கு உத்பத்தி இல்லை என்று சங்கிப்பது மந்தம் என்று அங்கே முதல் ச்லோகத்தில் ஆசங்கனம்

மந்தம் என்று ஆக்ஷேபத்தை ஸ்பஷ்டமாகக் காட்டிப் பரிஹாரம் உரைக்கப்பட்டது. அங்கேயே இந்த்ரியங்களுடைய ஸங்க்யை முதலிய விஷயங்களைப்பற்றி பரீக்ஷணம் செய்யும் நடுவிலுள்ள அதிகரணங்கள் காக தந்த பரீக்ஷையைப் போல் நிஷ்ப்ரயோஜந மென்றும் ஆக்ஷேபம் செய்து அதுவும் பரிஹரிக்கப்பட்டது. அந்த ச்லோகம் மந்தத்வம், அபலத்வம் என்கிற இரண்டு சங்கைகளின் ஆக்ஷேப ஸமாதாநங்களுக்கு த்ருஷ்டாந்தமாகும். அபலத்வம் என்பது ப்ரயோஜன மில்லாமையைச் சொல்லும். அஸங்கதத்வ மென்பது ஸங்கதியில்லாமை. ப்ரகரணத்தில் ஒட்டாமை ஸங்கதியின்மையாகும். சாஸ்த்ர ஸங்கதி, அத்யாய ஸங்கதி, பாத ஸங்கதி முதலிய பல ஸங்கதிகள் கவனிக்கத்தக்கவை. உத்கீதத்தின் உபாஸநம் கர்மத்தின் பல ஸம்ருத்தியை ப்ரயோஜன மாக உடையது. அந்த விசாரம் கர்ம காண்டத்தைக்காட்டில் இங்கேயே அதிக ஸங்கதமானதென்று ஸ்ரீபாஷ்யத்தில் அருளிச்செய்யப்பட்டது. ஸாதநத்தைப்பற்றி விசாரம் செய்யும் மூன்ருவது அத்யாயத்தின் நடுவில் ஸித்தமான ப்ரஹ்மத்தைப்பற்றி உபய லிங்கம் முதலிய அதிகரணங்களில் என் விசாரிக்க வேணும்? அது அந்த அத்யாயத்தில் ஸங்கதமல்ல வென்று ஆக்ஷேபம் செய்து, ஸித்தமான ப்ரம்ஹமும் ஸித்தோபாயமான ஸாதநமு மாகு மென்று காட்ட ஸாதநாத்யாயத்தில் அந்த விசாரம் என்று இங்கே பரிஹரிக்கப்படுகிறது. அப்படியே பலாத்யாயமான நாலாவது அத்யாய ஆரம்பத்தில் பக்தியின் ஆவ்ருத்தி முதலிய ஸாதந விசாரம் செய்வது ஸங்கதமல்ல வென்று ஆக்ஷேபம் செய்து, ஸாதநமான ப்ரீதிரூபாபந்ந ஜ்ஞாநம் ஸ்வயம் பலத்தைப்போல் காட்டுவதில் நோக்கு என்று பரிஹரிக்கப்பட்டது. இரண்டாவது அத்யாயத்தின் இரண்டாவது பாதத்தில் பிரதிமத நிரஸநம் செய்வதால் அந்தப் பாதத்தில் பஞ்சராத்ராதிகரணத்திற்கு ஸங்கதியில்லை யென்று ஆக்ஷேபித்து, ப்ரதிமதமோ வென்கிற சங்கையைக் கிளப்பி அது வேதாந்த மதத்திற் கொட்டினதே யொழிய விரோதியல்லவென்று தீர்மானிக்கிறதென்று பரிஹாரம். அந்தராதிகரணத்தில், கண்ணுக்குள் உள்ள புருஷன் ப்ரதிபிம்பமோ வென்கிற சங்கை மிகவும் மந்தமென்றும், கண்ணுக்குள் தெரியும் ப்ரதிபிம்பத்தை உபாஸிப்பதற்கும் அதற்குப் பலமுண்டென்று நினைப்பதும் நிரம்பவும் பீடாகுமென்றும் ஆக்ஷேபித்துப் பரிஹரிக்கப்படுகிறது. மாநபாதம் என்பது ஸூத்ரகாரர் செய்யும் தீர்மானத்திற்கும் அநுமாநம் முதலிய ப்ரமாணாந்தரங்களுக்கும் விரோதம். ஸாவயவமானதெல்லாம் அநித்யமாகுமென்று அநுமாநத்தால் ஸாதித்து அதனல் ஸாவயவமான திவ்யமங்கள விக்ரஹத்

துக்குச் சொல்லும் நித்யத்வத்தைப் பாதிக்கவேணுமென்று அந்தரதி கரணத்தில் ஆக்ஷேபித்து, ப்ரமாணாந்தரங்களுக்கு ஈச்வரனுடைய விக்ரஹ விஷயத்தில் ப்ரஸரமில்லையென்றும், ஈச்வர விஷயத்தில் வேதமொன்றே ப்ரமாணமாகுமென்றும், தர்மி க்ராஹகமான அந்த ப்ரமாணம் அந்த தர்மிக்குச் சொல்லும் விக்ரஹம் தர்மம் முதலியவற்றை அது சொன்ன படியே க்ரஹிக்கவேண்டுமே யொழிய, அதை ஒரு விதத்திலும் எட்டக் கூடாத யுக்தி முதலியவற்றால் ஆக்ஷேபிக்கக்கூடாதென்றும் பரிஹாரம் காட்டப்படுகிறது. விசயம் என்பது ஸம்சயம். ஒரு ஸம்சயத்தைத் தீர்ப்பதற்காக அதிகரணம் வந்தும் அந்த ஸம்சயம் தீராமல் ஸூத்ரத்தின் நிர்ணயத்தில் ஸம்சயமே யுளது. நிர்ணய ஹேதுக்களால் நிர்ணய மேற் படவில்லை யென்று ஆக்ஷேபம் வரலாம். மநந காலத்திலிந்த சங்கைக ளெல்லாம் உண்டாகலாமென்று காட்ட மந்த்ருனென்கிற பதத்தால் ஸூசகம். இந்தப் பத்யாவளியானது ஸாவதானர்களை ஸந்தோஷப்படுத்து மென்று கூறியதை அநுஸரித்து முடிவிலும் இந்த ஸாரமாலை ஸந்தோஷத் தைக் கொடுக்கட்டுமென்று கூறப்போகிறார்.

---

ஸ்ரீ:

# சரணாகதி வைபவம்.

[ஸ்ரீ உப. தாதாசார்யர், வக்கீல், ஸ்ரீ வைகுண்டம்.]

---

ஸ்ரீ தேசிகனும் "ப்ரபத்ய ஸுதுர்ஷ்ய ந திசதி ஸ்வகீயம் ஸுக வாஸம்" [பெருமாள் சரணாகதிசெய்துகொண்டவனுக்கல்லது மற்றையோர்க் குத் தன் பரம பதத்தைத் தருவதில்லை] என்றும், "இன்னமுதத்தமுதால் இரங்கும் திருநாரணனே மன்னியவன் சரண்" என்றும் சரணாகதியே நமக்கு முக்ய உபாயம் என்றும், அது இல்லாவிட்டால் ஒருவன் மோக்ஷம் செல்ல வழியில்லை என்றும் ஸாதித்திருக்கிறார். இதே மாதிரி ஒவ்வொரு வைஷ்ணவ ஆசார்யர்களும் சரணாகதியைத் தவிர மோக்ஷத்துக்கு வேறு வழியில்லை என்று சொல்லி யிருக்கிறார்கள். இப்படிப்பட்ட உபாய விஷய மாகப் பற்பல ஸந்தேஹங்களைப் பற்பலர் அடிக்கடி கேட்கிறார்கள்.

முதற்கேள்வி:—சரணாகதி என்னும் ஒரு சிறிய வ்யாபாரம் ஐந்து நிமிஷத்தில் முடிந்து விடுகிறது. அந்த ஐந்து நிமிஷத்திலும்கூட நமக்குப்

பெருமாளிடத்தில் அந்தரங்கமான பக்தியிருப்பதாகச் சொல்லவே முடியாது. தவிர நமது இந்த அற்பமான ஒரு கார்யத்திற்குப் ப்ரதியாகப் பகவான் அப்படிப்பட்ட மோக்ஷம் என்று சொல்லப்படும் ஒரு பெரிய பலத்தைக் கொடுக்கிறுன் என்றுல் அது எப்படி இருக்க முடியும்? பாபம் நிறைந்திருக்கிற நமக்குப் பெருமாள் இப்படிப்பட்ட ஒரு ஸ்தானத்தைக் கொடுப்பாரா?

இதற்கு ஸமாதானத்தை ஒரு லௌகிக த்ருஷ்டாந்தத்தால் கூறுவோம். ஒரு பெரிய சக்ரவர்த்திக்கு ஒரு குமாரன் இருக்கிறுன். அவன் அற்ப குணமுள்ள சில துஷ்டர்களுடன் சேர்ந்துகொண்டு பிதாவின் வார்த்தையைக் கேளாமல் நடந்துவருகிறுன். அதனுல் பிதாவுக்குக் கோபம் உண்டாகிறது. அவனைத் தண்டிப்பதற்காகப் பிதா அவனுடன் பேசுகிறதில்லை; அதனுல் அந்தப் பிள்ளையும் பிதாவினிடம் பேசுகிறதில்லை. வெகுகாலம் இந்த மாதிரி இருவரும் இருந்துகொண்டிருக்கிறுர்கள். அப்போது தகப்பனே 'ஐயோ! இந்தப் பையன் இப்படி இருக்கிறுனே! இவனுக்கு எப்போது நல்ல புத்தி வரப்போகிறது? இந்த அருமைக் குழந்தையை விட்டுப் பிரிந்து எவ்வளவு காலம் நாம் இப்படி இருப்பது?' என்று வருத்தப்பட்டுக்கொண் டிருக்கிறுன். ஆனுல் அவனுக்கு வலுவில் அந்தப் பையனைக் கூப்பிட இஷ்டமில்லை. இருந்தபோதிலும், அந்தப் பையனுக்கு வேண்டியவர்களான சில ஸுஹ்ருத்துக்கள் அந்தப் பையனைப் பார்த்து "அப்பா! நீ மேன்மையான சக்ரவர்த்தியின் பிள்ளை. நீ நல்ல ஸ்திதியிலிருந்து லோகம் முழுவதும் ஏக சக்ராதிபத்யம் செய்யவேண்டியவன். நீ ஏன் இப்படி அற்பர்களான துஷ்டர்களுடன் கூடிக் கெடுகிறுய்? உன் பிதாவினிடம் போய், 'நான் இனித் துஷ்டர்களுடன் கூடுவதில்லை; உமது சொற்படி கேட்கிறேன்; நீர் என்னை த்வேஷிக்காமல் உம்மிடம் சேர்த்துக்கொள்ளும்; உம்மை விட்டால் எனக்கு வேறு கதி யாரிருக்கின்றனர்?' என்று சொன்னுயானுல் உன் பிதா உன்னை உடனே சேர்த்துக்கொள்வர். நீ ராஜ போகத்தை அநுபவிக்கலாமே' என்றனர். அப்போது அந்தப் பையன் இவைகட்கு உத்தரமாக "என் பிதா என்னிடம் கோபமாக இருக்கிறுரே; நான் போய் இந்த மாதிரி சொன்னுல் அவர் என்னைச் சேர்த்துக்கொள்வரா?" என்றுன்.

அப்போது அந்த ஸுஹ்ருத்; "அப்பா! நீ ஏன் இதைப்பற்றி ஸந்தேகப்படுகிறுய்? 'இப்படிப் பிள்ளையை விட்டு நாம் பிரிந்திருக்கிறுேமே; இந்தப் பிள்ளைக்கு நல்ல புத்தி வந்து எப்போது நம்மிடம் வரப்போகிறுன்?' என்றல்லவோ உன் தந்தை ஆவலுடன் இருக்கிறுர்" என்கிறுர். புத்தி

சாலியான பையனுனல், "வாஸ்தவம்; நம்முடைய பிதா சக்ரவர்த்தி; அவருடன் சேர்ந்தால் நாமும் சக்ரவர்த்தியாக எப்போதும் ஸுகத்தை அநுபவிக்கலாம். நமக்கு அப்போது கிடைக்காத விஷயம் என்ன இருக்கிறது? ஒன்று மில்லையல்லவா? இந்த அற்பப் பயல்களுடன் சேர்வதால் நமக்குக் கிடைக்கிற ஸுகம் ஒன்றுமே இல்லை" என்று முதலில் யோசிக்கிறுன். பின்பு கூச்சத்துடன் மெல்ல அவனிடம் அணுகுகிறுன். அம்மாவினிடம் போய்ச் செய்தியைச் சொல்லுகிறுன். உடனே அவன் தாய், தன் பர்த்தாவினிடம் போய், "குழந்தை வருகிறுன்; அவனே அச்சப்பட்டுக்கொண்டு வருகிறுன்; அவனை ஒன்றும் கடுமையாகச் சொல்லிவிடாதேயுங்கள்! நம்முடைய குழந்தை என்ன குற்றம் செய்தது? செய்தாலும் நாம் உடனே பொறுக்கவேணும் அல்லவா? அவனுக்கு நம்மை விட்டால் ரக்ஷகர் யார்? ஆலோசியுங்கள். அவனைக் கட்டாயமாகச் சேர்த்துக்கொள்ளவேணும்" என்கிறுள். அவரோ தமது பத்நியின் வார்த்தையைத் தட்டமுடியாமல் அவளிடம் மோஹம் கொண்டவராக இருக்கிறுர். உடனே தாயார் அந்தப் பையனைத் தகப்பனிடம் கூட்டிக்கொண்டு போய்க் குழந்தையைப் பார்த்து, "அப்பாவை ஸேவி" என்கிறுள். பையனும் அப்பாவினிடம் போய் "அப்பா! நீர் இப்படிப் பேசாமலிருந்தால் வேறு எனக்குக் கதி யார் சொல்லும்?" என்று ஸேவிக்கிறுன். உடனே 'அவன் பிதா நல்ல உத்தம புருஷனுனபடியாலும், நல்ல தயாவான் ஆனபடியாலும், இந்த வார்த்தையைக்கேட்டுத் தாங்கமாட்டாமல் உடனே தன் குழந்தையைக் கட்டி அணைத்துக்கொண்டு அங்கீகாரம் செய்துகொள்ளுகிறுன். இப்படி அங்கீகாரம் செய்து அந்தப் பையனைச் சேர்த்துக்கொள்ளாமல், அரசன் தான் மட்டும் தனித்து ராஜ்ய பரிபாலநம் செய்தால் அதில் அவனுக்கு என்ன ஸுகம் ஏற்படும்? தன் குழந்தைகள் ஸஹிதமாக ராஜ்ய பரிபாலநம் செய்து ஏக குடும்பமாக அநுபவித்தால் தானே அவனுக்கு ஸுகம்? ஆகையால், 'இப்படிப் பிரிந்தோமே' என்று கவலையுடன் இருந்த தகப்பனுர், 'பையன் வந்து விட்டான்; இனித்தான் நமக்கு ராஜ்யாநுபவ ஸுகம் ஏற்படும்' என்று ஸந்தோஷத்துடன் அங்கீகாரம் செய்கிறுர்.

இந்த மாதிரி, ராஜாவினுடைய சொல்லைத் தட்டி நடந்த வேறு யாருடைய குற்றத்தை அரசன் இப்படி ஒரு வார்த்தை சொன்னதற்காகப் பொறுப்பன்? பிள்ளை சொல்லியதால் அன்றோ? பிள்ளையாக இருந்தாலும் கூட, இவ்வளவு தூரம் கெட்டவர்களுடன் சேர்ந்தவனுக இருந்தவனை இத்தனை நாள் பொறுக்காமல் கோபத்துடன் இருந்து வந்து, அவனுடைய

முகத்தில் விழிக்கவும் கூடாது என்று இருந்த பிதாவினிடம் போவதற்குக் கூச்சப்பட்டுக்கொண்டிருந்த பையனை அவரிடம் கொண்டுபோய் அந்தத் தாயும் இவ்வளவு தூரம் சிபார்சு செய்யாவிட்டால் அந்தத் தகப்பனிடம் இவன்தான் போவானா? தகப்பன்தான் இவனைத் தன்னிடம் வர இடம் கொடுப்பானா? இல்லையே! தாயின் மோஹத்தில் அகப்பட்டு அவள் வார்த்தையைத் தட்டமுடியாமல் அல்லவோ அரசன் க்ஷமித்தது? இப்படிப்பட்ட சிபார்சு இல்லாவிட்டால் பிதா இவனிடம் முகம் கொடுத்திருக்க மாட்டாரல்லவா? தவிரவும், தகப்பனிடத்தில் ஏராளமான இரக்கம் இருந்ததினால் அன்றோ இப்படிப் பிள்ளை சொன்ன வார்த்தையைக் கேட்டுத் தாங்கமாட்டாமல், தகப்பன், பிள்ளையின் குற்றத்தை எல்லாம் மறந்தது. அவன் இரக்கமற்ற மனமுடையவனா யிருந்தாலும், பெருந்தன்மை இல்லாதவனாக இருந்தாலும், இந்தப் பிள்ளையைத் தகப்பன் இந்த ஸேவைக்காகச் சேர்த்துக்கொள்ளவே மாட்டான். தகப்பனிடமுள்ள தயை பெருந்தன்மை முதலிய குணங்களல்லவா இந்தக் கார்யத்தைச் செய்தன?

இந்த மாதிரி, பிள்ளையைத் தகப்பன் சேர்த்துக்கொண்டதற்குக் காரணத்தை ஆராய்ந்து பார்த்தால், தாயின் சிபார்சு, பிள்ளை என்கிற பந்துத்வம், தகப்பனிடம் இயற்கையாயுள்ள தயை முதலிய குணங்கள், தகப்பனுக்கே உள்ள ஸுகாநுபவம் முதலிய குணங்களன்றோ?

இதேமாதிரி பகவான் நமக்குப் பிதா. **'மாத்ருதேவோ பவ பித்ருதேவோ பவ ஆசார்யதேவோ பவ அதிதிதேவோ பவ!'** என்பது வசநம். அவன் பேச்சைக் கேட்டு நடக்காததனால் நம்மிடம் அவன் கோபத்துடன் இருக்கிறான். **"ச்ருதி: ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா யஸ்தாமுல்லங்க்ய வர்த்ததே ஆஜ்ஞாச்சேதீ மம த்ரோஹீ"** (ச்ருதியும் ம்ருதியும் என்னுடைய கட்டளை; எவன் அவற்றை மீறி நடக்கிறானோ அவன் எனக்குச் சத்ரு] என்று பெருமாள் சொல்லுகிறார். நாமோ ப்ரதிதிநமும் ஈச்வரன் கட்டளையை மீறி நடக்கிறவர்களே தவிர, அவன் கட்டளையை அநுஸரித்து நடக்கின்றவர்களல்லர்.

**'வர்த்தயேத் பஞ்சகாலவித்'** என்று ஒவ்வொரு திநத்தையும் ஐந்து பாகங்களாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்திலும் இன்னின்னகார்யம் தான் செய்யவேணுமென்று கடவுள் கட்டளை இட்டிருக்கிறார். ச்ருதி ஸ்ம்ருதிகளில் விதித்தபடி தவறாமல் நடக்கிறவர் யார் இருக்கின்றனர்? நம் பூர்வாசார்யர்கள் **'நதர்மநிஷ்டோஸ்மி'** என்றும் **'அஹமஸ்ம்யபராதாநாம் ஆலய:'** என்றும் **'அஹமஸ்ம்யபராதசக்ரவர்த்தீ'** என்றும் பலபடிகளிலும் தங்களுடைய பாபத்தை நினைத்து வருந்தி யிருக்கிறார்கள். நாம் எந்த மூலை? ஒவ்வொரு நிமிஷமும் நாம் மஹத்தான அபராதங்களைச்

செய்கிறவர்கள். ஆனதால் ஈச்வரன் நம்மிடம் மிகுந்த கோபத்துடன் நம்மை வெறுக்கிறான். இவ்விதமாக, நம்முடைய பிதாவான ஸர்வேச்வரனை விட்டு, அற்பர்களான மநுஷ்யர்களையும் அற்ப பலனைக் கொடுக்கக்கூடிய சில்லரைத் தேவதைகளையும் கிட்டி அவர்களுடன் சேர்ந்துகொண்டு அவர்களுக்கு அநுகூலமான காரியத்தைச் செய்து வருகிறோம். அப்போது நமக்கு வேண்டியவர்களான சில நல்லவர்கள் வருகிறார்கள். அவர்கள்தான் ஆசார்யர்கள். அவர்கள் நமக்கு இவ்வாறு புத்தி சொல்லுகிறார்கள்:—“அப்பா! நீ பெருமாளுடைய பிள்ளை. அவன் அநுபவிக்கிற ஸுகமெல்லாம் நீயும் அநுபவிக்கவேண்டியவன். நீ ஏன் இந்த மாதிரி கெட்ட மார்க்கத்தில் அற்பர்களுடன் சேர்ந்து உன் பிதாவின் கோபத்திற்குள்ளாகிறாய்? உன் பிதாவான பெருமாளிடம் போய் ‘நான் இனி அற்ப மநுஷ்யர்களுடனும் தேவதாந்தரங்களுடனும் சேர்கிறதில்லை; உம்முடைய சொல்லையே கேட்கிறேன்; நீர் என்னை உம்மிடம் சேர்த்துக்கொள்ளும். உம்மை விட்டால் எனக்கு வேறு யார் இருக்கின்றனர்?’ என்று சொல்லு. அப்போது ஈச்வரன் உன்னைச் சேர்த்துக் கொள்வன். நீ மோக்ஷத்தில் போய் பெரிய ஸுகத்தை அநுபவிக்கலாம்” என்கிறார். அதற்கு அப்பையன் “நான் ரொம்ப அபராதி ஆச்சுதே; பெருமாள் என்னிடம் நிரம்ப கோபமாக இருக்கிறாரே! நான் பொய் சொல்லுகிறவன், குடிக்கிறவன், பரஸ்திரீகமநம் செய்பவன், மகா கேவலமான காரியங்கள் செய்கிறவன்; இப்படிப்பட்ட, மகா பாபிக்கும் பெருமாள் இரங்குவாரா’? என்று கேட்டால் அந்த நல்லவரான ஆசார்யன் சொல்லுகிறார். **“ஶரணம் ச ப்ரபந்நாநாம் தவாஸ்மீதி ச யாசதாம்। ப்ரஸாதம் விதுர் ஹந்தாரமபி குர்வந்தி ஸாதவ:।’** என்று தகப்பனைக் கொலைசெய்கிறவனாக இருந்தாலும் ‘நான் உன்னைச் சேர்ந்தவன்’ என்று சரணமடைந்தால் அவர்களுக்கு ஸாதுக்கள் தயை செய்கிறார்கள். அவர்கள் குற்றத்தையும் பொறுக்கிறார்கள்.” **யே ந்ருஶம்ஸா துராத்மாந: பாபாசாரரதாஸ்ததா। தேऽபி யாந்தி பரம் ஸ்தாநம் நரா நாராயணாஶ்ரிதா:’** என்று மஹா கெட்டவர்களாக இருந்தாலும், பாபம் செய்வதிலேயே ஆசையுள்ளவர்களாக இருந்தாலும், ஸ்ரீமந் நாராயணனை ஆச்ரயித்துச் சரணாகதி பண்ணினவர்கள் பரமபதத்தை அடைகிறார்கள். பொறுக்க முடியாத குற்றங்களையுங்கூட, ஒரு பெருந்தன்மையுடைய மநுஷ்யன் காலில் விழுந்து என்னை மன்னிக்கவேணுமென்றால் அவன் கட்டாயம் மன்னிக்கிறான் என்பது லோகத்தில் அநுபவ ஸித்தம்.” என்றிப்படி அந்த ஆசார்யன் இவனுக்குத் தேறுதல் சொல்லிப் பெருமாளிடம் போய்ச் சரணாகதி செய்தால் அவர் உன்னைச் சேர்த்துக் கொள்வார் என்று சொல்லுகிறான்.

ஸ்ரீ:

# வைராக்ய பஞ்சகம்

[ஸ்ரீ. உப. வித்வான் ஏ. வி. கோபாலாசார்யர், திருச்சி.]

[ஸம்புடம் 19, ஸஞ்சிகை 12, பக்கம் 367 தொடர்ச்சி]

---

ஜ்வலது ஜலதி க்ரோட க்ரீடத் க்ருபீடபவ ப்ரபா
ப்ரதிபட படு ஜ்வாலா மாலாகுலோ ஜடராநல: ।
த்ருணமபி வயம் ஸாயம் ஸம்புல்ல மல்லி மதல்லிகா
பரிமளமுசா வாசா யாசாமஹே ந மஹீச்வராந் ॥

'நெற்களத்தில் பக்ஷிகளுக் கென்றும் பிச்சைக்காரர்களுக் கென்றும் கதிர்களைக் கொஞ்சம் விட்டிருப்பதுண்டு. தாந்யங்களும் அங்குச் சிந்திக் கிடக்கும். ஜ்ஞாநம் கர்மம் என்று இரண்டு பக்ஷங்களையுடைய பக்ஷிகளைப் போன்ற விரக்த ஜ்ஞாநிகள், அந்தக் கதிர்களையும் தாந்யங்களையும் பொறுக்கிக்கொண்டு, அக்நியைப்போல் கிளம்பும் பசியை உசிதமாய் ஆற்றிக் கொள்ளலாம் என்று சொன்னீர். தாந்ய அறுவடைக் காலங்களில் (அதாவது வருஷத்துக்கு ஏதோ ஒருதரம் இரண்டுதரம்) அங்கு ஸிலம் கிடைக்கலாம். தாந்யங்களை மாஸக் கணக்காயும் நாள் கணக்காயும் சேர்த்துக் குஸூலத்திலும் கும்பத்திலும் வைத்திருப்பது இளப்ப மென்றும், அஹந்யஹநி காலக்ஷேபம் உத்தம கல்பம் என்றும் மநு சொல்லுகிறார். உமக்கு ஸிலம் தினந்தோறும் அகப்படுமா? தாந்யத்தை அதிகமாகச் சேர்த்துவைக்கவும் கூடாதே; அன்றன்று கிளம்பும் பசியை அன்றன்று ஆற்ற ஸிலம் அகப்படாதே; பசி மண்டி எரியுமே.' இப்படி ஆக்ஷேபம் வர, 'எவ்வளவு எரிந்தாலும் எரியட்டும்; அரசர்களுக்கு எம் நாவில் இன் கவியாம் கொடுகிலோம்; நாமும் யாசிக்க மாட்டோம்' என்கிறார். **ஜலதிக்ரோடக்ரீடத்**—ஸமுத்ரத்தின் மத்தியில் ஓடி விளையாடும். இங்கே படபாக்நியை ஒப்பிட்டதாக ஜாடராக்நி வர்ணிக்கப்படுகிறது. **'ஸம்வர்த்த ஸமயவிஜ்ரும்பண ஸமுதீர்ண கோர தஹந ஜ்வாலா ஜாலா'** என்பதைப் போல் இங்கே வர்ணநம். பசி ப்ரளயத்துக் கொப்பாகும். இங்கே **'க்ரோட'** சப்தம் ப்ரயோகித்திருப்பது அழகு. **'க்ரோட'** என்பது மார்பையும் சொல்லும். இந்த அக்நி ஜலத்தில் பிறந்ததென்று, அதை ஜலத்தின் குழந்தை

யாக **'கூரவீலஹவ'** என்கிற சப்தத்தினுல் நிர்த்தேசிக்கிருர். ஸமுத்ரத்தின் குழந்தையான அக்நி தன்னைப் பெற்ற ஸமுத்ரத்தின் மார்பில் விளையாடுவது உசிதம். **'கூரவீலம்'** என்பது ஜலத்தின் பெயர். **'அஜ்ஜ்யோ$$ம்ரி$$:'** என்கிற ச்ருதிப்படி ஜலத்திலிருந்து அக்நி உண்டாகலாம். இது தத்வமுக்தா கலாபத்திலும் கூறப்பட்டிருக்கிறது. மேலே ஜலமும் உள்ளே அக்நியுமாய் இருக்கும் படபாக்நி, மேலே ஜில் என்ற சர்மமும் உள்ளே மண்டி எரிவதுமான ஜாடராக்நிக்கு ஸரியான த்ருஷ்டாந்தமாகும். **'வுஹாவுதிஷடிவடி-ஜாஜூாஊாஜூாக-ஜொ ஜஂஹாதஜு:'**—அந்த அக்நியின் ஜ்வாலையைப்போல் தீக்ஷ்ணமாய் எரியும் தன்மையுள்ள பசி என்னும் அக்நி. இதைத்தான் அதி துல்ஸஹமான **'க்ஷ-கி'** என்று பரீக்ஷித் சொன்னுர். **'ஜுலித-'**—யதேஷ்டமாக மண்டி எரியட்டும். **'உஹீஸுாரா'** அரசர்களை. **'தரணவி'** ஸ்வல்பங்கூட. ஆனுல் அதிகம் கிடைத்தால் யாசிப்போம் என்று நினைக்கவேண்டாம். இங்கே **'தரணம்'** என்பதால் **'நாமெநஷூரண உதகூ......................... வாஅா ந யாஅாஊஹெ'** என்கிற ச்லோகத்தில்போல ஐச்வர்யத்தைக் கொள்ளவேணும். எம்முடைய புத்தியில் எது த்ருணமாகுமோ அதைக் கொள்ளவேணும். **'ஸாயஂஸஂஹெ-ஜூ உஜூெதஜூிகாவரிஊஹ-ஆ வாஅா'**—ஸாயங்காலத்தில் அப்பொழுது அலரும் உயர்ந்த மல்லிகா புஷ்பத்தின் வாஸனை கமழும் உயர்ந்தவாக்கை, மநஸ்ஸைக் கவரும் அழகினுலும் வாஸனையினுலும் ஏக காலத்தில் செடி முழுவதும் கொத்துக் கொத்தாய்ப் புஷ்பித்திருக்கும் வாஸனை வீசும் புஷ்ப ஸ்தபகங்களுக்கு ஒப்பிடுகிருர். **'ஊஜூாகாஜாஂ ஸஜுஷூதீழ ! யஸூ நிதூ வு ஸுஂஸஜி ஸஜு: ஸளஜுஹவெஜிந:'** என்று தம் வாக்கை ஸௌரபமுடைய மாலைக்கு ஒப்பிட்டார். "என்னுவில் இன்கவி யான் ஒருவர்க்கும் கொடுக்கிலேன், தென்னு தெனு வென்று வண்டுமுரல் திருவேங்கடத் தென்னை என்னப்பன் எம்பெருமானுளனுகவே" என்று ஆழ்வார் கொண்ட வ்ருத்தத்தை ஸ்வாமியும் கைப்பற்றுகிருர். ஆழ்வாருக்குத் தம் இன்கவி தமக்கே தித்தித்தது. திர்யக்குகளான வண்டுகள்கூட 'தென்னுதெனு' வென்று திருவேங்கடத்தில் உள்ள சோதிக்குக் கவிபாடுகின்றனவே! அந்த மதுகரங்களுடைய வ்ருத்தியைத் துல்ய சீலரான நாமும் அநுஸரிப்பது உசிதமன்ருே. குசேலரை **'யாதாஊ-ஷிஊ-ஜெ'** என்னும் வர்ணனை, குசேலரைக் குறிக்கும். பரிமளமுள்ள வர்க்கினுல்(**'வரிஊஹ-ஆ வாஅா'**) குசேலரைப் போன்ற நாம் ஆராதிப்பது உசிதம். புஷ்பம் போன்ற வாக்கை நமக்குப் பகவான் கொடுத்திருக்க, அதை அவன் விஷயத்தில் நிவேதநம் செய்வது தகுதி. அவன் கொடுத்த விசித்ர வாக் ஸம்பத்தி அவனுக்கே நிவேதநார்ஹம். அப்பொழுது மலரும் நல்ல புஷ்பங்களால் அலங்க்ருதை

யான ஸ்த்ரீ, அந்தப் புஷ்பங்களையும் அதன் வாஸனையையும், தன் நாதனைத் தவிர வேறொருவரிடமும் எப்படி அணுகவொட்டமாட்டாளோ, அப்படியே பாதிவ்ரத்ய தர்மத்தைப் பகவானிடத்தில் வஹிக்கும் நாம், புஷ்பம்போன்ற நம் வாக்கை மஹீச்வரர்களுக்கு விநியோகிக்கமாட்டோம். நம்முடைய நாதன் விஷயத்திலும் சில்வான ப்ரயோஜநங்களை உத்தேசித்தும் இந்த வாக்கை விநியோகிக்கமாட்டோம். நாதனுக்கு இந்தப் பரிமளத்தைக் கொடுப்பது ஸ்வயம் ப்ரயோஜநமாக எண்ணி அவனுக்கு இன் கவி கொடுப்போம். '𑌵𑌯𑌂 𑌨 𑌯𑌾𑌚𑌾𑌮𑌹𑍇'—நாம் யாசிக்கமாட்டோம். பசிக்கு என்ன ஆறுதல் வந்தது? "உண்ணும்சோறும் பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன்" என்றிருப்போம். 'அதி துஸ்ஸஹமான இந்தப் பசியும் என்னைப் பாதிக்கவில்லை. எனெனில் உம்முடைய தாமரை போன்ற முகத்திலிருந்து ஒழுகும் ஹரி கதாம்ருதத்தை நான் பாநம் செய்துகொண்டேயிருக்கிறேன்' என்றார் பரீக்ஷித்து. '𑌵𑌾𑌚𑌾 𑌨𑌿𑌜𑍀𑌯𑌯𑌾 [illegible] 𑌯𑌾𑌂 𑌨𑌾𑌥 𑌭𑌿𑌕𑍍𑌷𑌾𑌮𑌹𑌃' என்று பண்டிதராஜரும், கண்ணனே தமக்கு நிர்மலமான மதுரவாக்கைப் பிச்சை கொடுத்தார் என்கிறார்.

**𑌦𑍁𑌰𑍀𑌶𑍍𑌵𑌰𑌦𑍍𑌵𑌾𑌰 𑌬𑌹𑌿𑌰𑍍𑌵𑌿𑌤𑌰𑍍𑌦𑌿𑌦𑍁𑌰𑌾𑌸𑌿𑌕𑌾𑌯𑍈 𑌰𑌚𑌿𑌤𑍋𑌽𑌯𑌮𑌞𑍍𑌜𑌲𑌿𑌃 ।**
**𑌯𑌦𑌞𑍍𑌜𑌨𑌾𑌭𑌂 𑌨𑌿𑌰𑌪𑌾𑌯𑌮𑌸𑍍𑌤𑌿 𑌮𑍇 𑌧𑌨𑌞𑍍𑌜𑌯𑌸𑍍𑌯𑌨𑍍𑌦𑌨𑌭𑍂𑌷𑌣𑌂 𑌧𑌨𑌮𑍍 ॥**

'கொஞ்சம் தநம் ஸம்பாதித்தால் ஜாடராக்நியை மண்டி எரியவிட்டு, தர்மாநுஷ்டாநத்திற்கு வேண்டிய தேக ஸ்வாஸ்த்யமும் தேகபலமுமில்லாமல் வ்யாதிகளுக்கு இடம் கொடுப்பானேன்? ஆபத்திற்குத் தோஷமுண்டோ? ஆபத் தர்மமாக சரீர தாரணத்திற்காக ஸ்வல்ப தநத்தை ஸங்க்ரஹம் செய்துகொள்ளலாம் ['𑌧𑌨𑌕𑍍𑌷𑌯𑍇 𑌵𑌰𑍍𑌧𑌤𑍇 𑌜𑌾𑌠𑌰𑌾𑌗𑍍𑌨𑌿𑌃'] என்று பெரியோர் சொல்வர்.' இப்படிக் கேள்வி வரப் பதில் சொல்கிறார். 'நீர் சொல்வது லோக த்ருஷ்டத்துக்கு விரோதமாயும் ஒருவரும் அநுஷ்டிக்காத ஆசாரமாகவுமிருக்கிறதே. இந்த ஆசாரத்தில் எந்த ஆசிரியன் உம்மை ஸ்தாபநம் செய்தார்?' என்கிற கேள்விக்கும் பதில் சொல்லுகிறார். '𑌦𑍁𑌰𑍀𑌶𑍍𑌵𑌰𑌦𑍍𑌵𑌾𑌰 𑌬𑌹𑌿𑌰𑍍𑌵𑌿𑌤𑌰𑍍𑌦𑌿𑌦𑍁𑌰𑌾𑌸𑌿𑌕𑌾𑌯𑍈'—'இருபத்து நான்கு ஆசார்யர்களிடமிருந்து தாம் ஜ்ஞாநத்தையும் ஸச்சரிதங்களையும் தெரிந்துகொண்டதாக ஏகாதச ஸ்கந்தத்தில் அவதூதர் யதுவுக்கு உபதேசித்தார். அந்த லக்ஷணத்தில் இந்த வைராக்யோபதேசம். ப்ரௌட ஸ்வபாவ மில்லாத ப்ரபுக்களின் வீட்டு வெளித் திண்ணையில் ஸ்வல்ப த்ரவ்ய யாசநத்திற்காகத் தெருவில் போகிறவர்களெல்லாரும் இவர்களை லாகவமாய் அவமதிக்கும்படி தீர்க்க காலம் உட்கார்ந்து கொண்டிருப்பதைப் பார்த்து, அந்தத் துராஸிகையினிடமிருந்து இந்த வைராக்யோபதேசம் பெற்றோம். அந்த உபதேசம் செய்த

ஆசார்யனுக்கு நாம் இதோ அஞ்ஜலி பந்தம் செய்கிறோம். முதலிலேயே இந்த க்ரந்தத்தில் ப்ரதிபாதிக்கப்படும் வைராக்யத்துக்கு நாம் ஆசார்யனை நமஸ்கரித்திருக்கவேண்டும். அது செய்யத் தப்பிப்போனோம். நல்ல வேளை இப்பொழுது இந்தத் தவறுதலை உணர்ந்தோம். இந்த விஷயத்தில் எமது ஆசிரியருக்கு நமஸ்காரம்' என்று 'ரசிதோயமஂஜலிः' என்னும் பதங்களால் காட்டுகிறார். துரீச்வரர்கள் வாசல் திண்ணையில் ஆஸிகை துராஸிகையாக இருப்பது ந்யாயம் தானே என்று ஆநுரூப்ய ப்ரதர்சநத்தில் நோக்கு. 'ப்ரபுக்கள் வீட்டுத் திண்ணையில் யாதொரு வேலையும் செய்யாமல் சோம்பேரியாய் உட்கார்ந்திருந்தால் மட்டும் போதுமே. "மெய்வருத்திக் கைசெய்துய்ம்மினோ" என்று ஆழ்வார் கூறியபடி, மெய் வருந்த வேண்டாமே' என்கிற பாவம் 'ஆஸிகா' என்கிற பதத்தால் ஸூசிக்கப்பட்டது. ஆஸிகா மாத்ரத்தால் தநம் அக்லேசமாய்க் கிடைக்குமே என்று அவர் அபிப்ராயம். ஸுக ஸாதநமான' தநத்தை க்லேச மஂஂறியில்' அடைவிப்பதால் ஸுகாஸிகை என்றே இதைச் சொல்லவேண்டும். ஏனெனில், ஆஸிகா மாத்ரம் ஸாதநமாவதாலும், ப்ராப்யமும் ஸுகஸாத்நமான தநமாதலாலும் இது ஸுகாஸிகை என்று சொல்லத் தட்டில்லை என்று அவர்கள் பாவம். 'பஹிர்விதர்திகா' என்பதில் 'பஹிः' என்கிற சப்தம் இல்லாவிட்டால் தெருக்கதவுக்கு உட்புறத்திலிருக்கும் அங்கணங்களிலுள்ள மேடைகளென்று அர்த்தமாகக் கூடும். உள்ளே உட்கார்ந்திருந்தால் தெருவில் போகிறவர்கள் பார்த்து அவமதிக்க இடமில்லை. உள்ளே காத்திருப்பதிலிருந்து இத்தனைத் தீவ்ரமாய் வைராக்யோபதேசம் துர்லபம். ஸ்வல்ப காசுக்காக யாசகரை வெளித் திண்ணையில் வெகு நேரம் காக்க வைத்து வெட்கப்படச் செய்து கொடுப்பவர் துரீச்வரர். 'ஹ்ரியா தெயம்' என்பது சாஸ்த்ரம். தாதாவுக்கு வெட்கப்பட்டுக் கொடுக்கவேண்டும் என்கிற பாவத்தை மறந்து, ப்ரதிக்ருஹீதாவுக்கு வெட்கத்தை உண்டுபண்ணிக் கொடுக்கவேண்டும் என்று அவர்கள் கொண்டார்கள் போலும். 'வெட்கத்தால் கொடு' என்று ஸாமாந்யமாகச் சாஸ்த்ரம் விதித்ததே தவிர, யார் வெட்கத்தால் என்று சொல்லவில்லை. 'முஹஷெ லஜ்ஜாவஂ தவலி யஜிநாஂ ஆஜி கரவணாः' என்று ப்ரபோத சந்த்ரோதயத்திலும் காணலாம். த்வார தேசத்தில் என்பது த்வார ஸமீபத்தில் உள்ளிலுமிருக்கலாம், வெளியிலுமிருக்கலாம். வெளியேயிருத்தல் இங்கே ஸ்பஷ்டமாகக் காட்டப்படுகிறது. உயிருக்கு மேற்பட்ட மாநத்தை இழந்து, ஸ்வரூபத்துக்கும் ஹாநியாக இருக்கும் இந்த ஆஸிகை துராஸிகைதான். 'பஂஜநாஹஂ' 'நாம் கேட்ட கேள்விக்கு ஸமாதாநம் வரவில்லையே. தநம் வேண்டியதற்கு நாம் சொல்லும் உபாயத்தை தூஷித்தீரேயொழியத் தநத்துக்கு ஒரு வழியும் நீர் சொல்ல

வில்லையே என்று ஆக்ஷேபம் வரக் கூறுகிறார். எனக்குத் தநம் இல்லாமலிருந்தால் அல்லவோ நான் அதை அடைவதற்கு வழி தேடவேணும்? எனக்கு ஸர்வோத்தமமான தநம் ஸித்தமாக இருக்கையில் நான் அதை ஸாதிக்கத் தேவையில்லையே! ஸித்தத்தை ஸாதிக்க முயல்வது ஸித்தஸாதந தோஷ மென்று தாந்த்ரிகர் சொல்வர். ஹிரண்ய நிதி யென்று உபநிஷத்தில் சொல்லப்பட்ட தநநிதி எனக்கு ஸித்தமாக இருக்கிறது. ஸ்வர்ணத்துக்குமேல் நாணய மில்லை. அது எனக்குள் நிதியைப் போல் நிஹிதமாக இருக்கிறது. பகவத் ஸ்வரூபம் இங்கே நிதியாகும். இந்த நிதி உம்முடைய குஹைக்குள் இருப்பது எப்படித் தெரிந்ததென்றால், அஞ்ஜநத்தை ஒக்கும் கண்ணனுடைய திருமேனியாகிய அஞ்ஜநத்தால் திவ்யாத்ம ஸ்வரூபம் என்ற ஹிரண்ய நிதி கண்ணுக்குப் புலப்படுகிற தென்று 'அஞ்ஜந வர்ணமுடைய தநம்' என்கிறதினால் ஸூசிக்கிறார். மையொக்கும் கரிய திருமேனி அஞ்ஜநமாகி, தன்னுள் உள்ள ஸ்வரூப மென்கிற நிதியை ப்ரகாசப்படுத்துகிறது. **'நிரபாயம்'**— **'ஸர்வே க்ஷயாந்தா நிசயா:'** என்று தநப் பொக்கிஷத்துக்கு வ்யயத்தால் குறைவுண்டு. இது கொள்ளக் குறைவிலதான அவ்யய நிதி. தநத்துக்கு எத்தனையோ அபாய முண்டு. **'உஹாநி தநம் ஹாநிநிதநம்'** என்றார் ப்ரபோத சந்த்ரோதயத்தில். இந்த நிதி ஸ்வயம் நிரபாயமாயும் ஆச்ரிதருடைய ஸகல பயாபஹமாயும் உள்ளது. **'ஸுஹ்ருதே'**-எனதே என்று சொல்லும்படி, அது **'ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம் ஜ்ஞாத்வா மாம் சாந்திம் ருச்சதி'** என்கிற க்ரமத்தில் தானாகவே தன்னை எனக்கு ஸொந்தமாக்கிக்கொண்டது. நான் கஷ்டப்பட்டு ஆர்ஜநம் செய்யாமலே அது எனக்கு இருக்கிறதென்று **'ஸுஹ்ருத்'** சப்தத்திற்குப் பாவம். **'தநஞ்ஜயஸ்ய ரக்ஷணம் தநம்'**-இது எப்படி தநமாகும் என்பதை உபபாதிக்கிறார். **'மத்யே தநஸ்ய திஷ்டாமி தேநாஹுர் மாம் தநஞ்ஜயம்'** என்று அர்ஜுநன் தன் பேருக்கு நிர்வசநம் சொல்லுகிறான். ராஜஸூய யாகத்திற்கு அபரிமிதமான தநத்தைக் கண்ணன் உதவியினால் அவன் ஜயித்துக்கொண்டுவந்தான். தநஞ்ஜயனுக்கும் தநம் கண்ணன். அவன் தநஞ்ஜயனானது கண்ணனால். தநத்துக்கு ஸௌலப்யம் இராது; துர்லபத்வமே அதற்கு ஸ்வபாவம். இந்தத் தநம், தநஞ்ஜயனுடைய தேருக்கு அலங்காரமாய், இழிவான ஸாரத்யத் தொழில் வஹித்து, அந்தத் தேர்த்தட்டில் தேர்ப்பாகனாக வீற்றிருக்கும் இழிவைத் தனக்குப் பூஷணம் என்று நினைக்கும் தநம். **'பாண்டவஸ்யாச்வாந் ஸுஸ்நாதாந் ஸலிலைர் ஹ்ருஷ்டோ வாஹாந் ஸ்வயம் ஹரி:'** என்று அர்ஜுந ரதத்தில் கட்டும் குதிரைகளைக் கண்ணன் தம் கையினால் ஜலத்தை எடுத்து ப்ரதிதிநமும் அபிஷேகம் செய்தாரென்று கர்ணாம்ருதா

சார்யர் இவர் ஸௌலப்யத்தை அநுபவித்தார். அர்ஜுநனுடைய ஜ்யேஷ்ட ப்ராதாவான யுதிஷ்டிரருக்கு அபிஷேகம் செய்விக்கு முன், தமது தம்பி குதிரைகளுக்கு அநுதிநமும் தன் கையால் அபிஷேகம் செய்தார் என்று அவருடைய அநுபவம். தேர்த்தட்டில் தேர்ப்பாகனய், அநேக ராஜாக்களும், பதினெட்டு அக்ஷௌஹிணீ ஸைந்யங்களும் பார்த்து நிற்க, கண்ணன், "வீற்றிருந்து ஏழுலகும் செங்கோல் செல்ல" என்று பரமபதத்தில் இருப்பது போல் இருந்தார். இதைத் தான் ஸ்ரீபாஷ்யகாரரும் **'வாமதம் ஸமிதம் ஸூத தனுஸாரம் ஸவ்யநோதகவாக்ஷிகனுகாஞ'** என்று அநுபவித்தார். தீநஞ் ஜய ரதத்திலிருப்பை இவர் பூஷணமாகக் கொண்டார். தநத்தினல் கர்வம் உண்டாவது ஸஹஜம். இந்தத் தநம் கர்வலேச மன்றியில் நைச்ய காஷ்டையை வஹிப்பது என்பதை இதனல் காட்டுகிறுர். இவ்வளவு ஸுலபமான தநம் எனக்கு ஸித்தமாக இருக்கையில், நான் வேறு தநம் தேட வேண்டிய அக்கறை யில்லே. அதனல் நிர்ப்பயமாக இருக்கிறதென்றும் சொல்லலாம். இந்த அச்யுத தநம் என்னே விட்டு நழுவாது. **'தஸ்யாஹம் ந ப்ரணச்யாமி ஸ ச மே ந ப்ரணச்யதி'** என்பது கீதை. துரீச்வரர்களுக்குச் சாடு ரசனை செய்யோம். அவர்கள் வெளித் திண்ணையில் துராஸிகைக்கு மட்டும் அஞ்சலி ரசனை செய்வோம்.

---

ஸ்ரீ:

# இரண்டாந் திருவந்தாதி.

**(உரையாசிரியர்:—ஸ்ரீ. உப. வித்வான் வை. மு. கோபாலக்ருஷ்ணமாசார்யர்)**

(ஸம்புடம் 19, ஸஞ்சிகை 11 பக்கம் 314 தொடர்ச்சி)

---

81. பகற்கண்டேன் நாரணனைக் கண்டேன் கனவின்
மிகக்கண்டேன் மீண்டவனை மெய்யே—மிகக்கண்டேன்
ஊன்திகழு நேமி யொளிதிகழுஞ் சேவடியான்
வான் திகழுஞ் சோதி வடிவு.

(இ—ள்.) பகல் கண்டேன்-(இரவும் பகலுமாகி விரவிவராத) நல் விடிவைக் கண்டேன்; ('இவ்வாறு நீர் சொல்வது எதனல்?' என்னில்,—) நாரணனை கண்டேன்-நாராயணனுகிய சூரியனைக் கண்டேன்; (கண் முதலிய

இந்திரியம் உதவி செய்யக் காண்கிற காட்சியினலல்லாமல்), கனவில் மிக-(நெஞ்சாலே காண்கிற) ஸ்வப்நாவஸ்தையைக் காட்டிலும் விசதமாக, மெய்யே-ப்ரத்யட்ச ஸமாநாகாரமான மாநஸ ஜ்ஞாநத்தினலே, மீண்டு-(இந்த்ரியங்களுக்கு அகப்படாமல்) மீண்டு, (நான்) அவனை-அந்த நாராயணனை, கண்டேன்—; ஊன் திகழும் நேமி-(பகைவர்களின்) மாமிசத்தினல் விளங்குகின்ற சுதரிசனழ்வானையும், ஒளி திகழும் சே அடியான்-புகர் விளங்குகின்ற திருவடிகளையு முடையனை ஸர்வேச்வரனது, வான் திகழும்-பரமாகாச மெனப்படுகின்ற பரமபதத்திலே விளங்குகின்ற, சோதி-பேரொளியையுடைய, வடிவு-வடிவத்தை, மிக கண்டேன்-நெஞ்சிலே ஊன்றுமாறு கண்டேன்; (எ-று.)

'முன்பு அந்த ஸர்வேச்வரனைக் கண்டு அநுபவிக்கப் பெற்றவர்கள் என்பட்டார்களோ!' என்று அதனைப் பாராட்டவேணுமோ? நான் படுகிற பாட்டைப் பாருங்கோளென்று, இதனல் அருளிச்செய்கிறார். நெடுங்காலமாகப் பகல் விரவாத ஸம்ஸாரமாகிற காளராத்திரியிலே கண்கெட்டு முன்னடி தோன்றப்பெறாத தமக்கு இப்போது நாராயணனகிற ஆதித்யன் தோன்றித் தன்னை விஷயீகரிக்கும்படி ஜ்ஞாந வைசத்யத்தைப் பிறப்பிக்கையாலே, "ஸுப்ரபாதாச மே நிசா" என்றாற் போலே 'பகற் கண்டேன்' என்றார். 'நுமது பேச்சு வடுகர் வார்த்தைபோலே பொருள் விளங்கவில்லையே' என்று பிறர் கருதக்கூடு மென்று நினைத்து, பகற்கண்டே னென்பதை விளக்க "நாரணனைக் கண்டேன்" என்கிறார். இப்படித் தாம் ப்ரத்யக்ஷ ஸமாநாகாரமுடைய விசதமாகக் கண்டது மாம்ஸ சக்ஷுஸ்ஸினலன்று; 'நெஞ்சென்னு முட்கண்ணால்' என்பதை விளக்க, 'கனவின் மிகக்கண்டேன் மீண்டவனை மெய்யே' என்கிறார். அங்ஙனம் ப்ரத்யட்ச ஸமாநாகாரமாகத் தாம் தரிசித்தது இன்னது என்பதைப் பின்னிரண்டடிகளாற் பேசுகிறார். 'ஊன் திகழும் நேமி' என்பதற்கு-வடிவழகு விளங்காநின்றுள்ள நேமி யென்றும், எம்பெருமானது திருமேனியிலே விளங்காநின்றுள்ள நேமி யென்றும், (சத்துருக்களின்) ஊனிலே [சரீரத்திலே] சென்று விளங்கும் நேமி யென்றும் பொருள் கூறலாம். வான் திகழும்—வான்போல் விளங்குகின்ற எனினுமாம்.

82. வடிக்கோல வாணெடுங்கண் மாமலராள் செவ்விப்
படிக்கோலங் கண்டகலான் பன்னாள்—அடிக்கோலி
ஞாலத்தாள் பின்னும் நலம்புரிந்த தென்கொலோ
கோலத்தா லில்லை குறை.

(இ—ள்.) வடி கோலம்-வடித்தெடுத்த அழகையும், வாள் நெடுங்கண்-(வடிவிலே வடிவாய்) ஒளிபெற்று (போக்தாவுக்கு அள்விட ஒண்ணாத

படி) மிக்க போக்யதையைக் கொண்ட திருக்கண்களையுமுடையளான, மா மலராள்-சிறந்த தாமரைப்பூவைப் பிறப்பிடமாகவுடைய பெரிய பிராட்டியார், செவ்வி படி கோலம்-அழகையே இயல்பாகக்கொண்ட (அவ்வெம்பெருமா னுடைய) திருமேனியி னழகை, கண்டு-அநுபவித்து, (கண்ணை மாறவைத் தல் கால்வாங்குதல் செய்யமாட்டாதே அவ்வழகிலே யாழங்காற்பட்டு), பல் நாள்-கால தத்துவ முள்ளவரையும், அகலாள்-(ஒரு நொடிப்போதும்) விட்டுப் பிரியமாட்டாதிருப்பள்; ஞாலத்தாள்-க்ஷமையே வடிவான பூமிப் பிராட்டியார், பின்னும்-(தலை நீர்ப்பாட்டிலே யநுபவிக்கும் பெரிய பிராட்டி யார் அப்பரமனது ஸௌந்தர்ய வெள்ளத்திலே ஆழங்காற்பட்டுக் கிடப் பதைக் கண்ட) பின்பும், அடிக்கோலி-(அவனும் அவளுமான சேர்த்தி யழகைக் கண்டு அநுபவிக்க)மிகவும் பாரிப்புக்கொண்டு,நலம்புரிந்தது-மிகவும் ஆசையைக் கொண்டிருப்பது, என் கொலோ-யாதாயிருக்கிறதோ? (ஆனால்), கோலத்தால்-அழகாலே, குறை-குறைவு, இல்லை—; (எ-று.)

கீழ்ப்பாசுரத்திற் கண்டேனென்றது வெறும் நாராயணனையன்று; ஸ்ரீமந் நாராயணனை யென்று, இதனால் அருளிச்செய்கிறார். 'வடிக் கோலம்' என்றதனால், நாட்டில் அழகு அடங்கலும் கோதாம்படி பேரழகு படைத்த அவனது அழகாகிற கோது கலவாத அழகு இவளுடைய அழகு என்றபடி. 'மாமலராள்' என்ற தொடரால் ஸௌகுமார்யஞ் சொல்லிற்று. "இறையு மகலகில்லேன்" என்று எம்பெருமானை ஒரு நொடிப்போதும் அந்த மலர்மகள் பிரியாதிருப்பது, அவ்வெம்பெருமானது இயற்கை யழகைக் கண் மாறுதலும் கால் வாங்குதலுஞ் செய்யமாட்டாமை யென் பார் "செவ்விப் படிக்கோலம் கண்டகலாள் பன்னாள்" என்றார். பன்னாள்-கால தத்வ முள்ளவரையு மென்றபடி. 'இப்படி மலர் மகள் ஈடுபட்டிருக்கச் செய்தே நில மகள் ஆசைப்படுவது தகுமோ?' என்ற சங்கையை 'ஞாலத் தாள் அடிக்கோலி நலம் புரிந்ததென்கொலோ' என்ற மூன்றாமடி தெரிவிக் கும். இருவர் அநுபவித்தற்கு ஏற்றதாகாமல் சீறுபாறு என்று ஒருத் தரோடொருத்தர் மாத்ஸர்யங்கொள்ள வேண்டும்படியாகும் க்ஷுத்ர விஷயங்கள் போலன்றிக்கே, திரள்திரளாக இழிந்தாலும் பூர்ணாநுபவஞ் செய்யும்படி போக்யதை விஞ்சி யிருப்பது பற்றியே ஞாலத்தாள் அடிக் கோலி நலம் புரிந்தது என்பார் "கோலத்தாலில்லை குறை" என்கிறார். வடிக்கோலம் என்பதற்கு-வடித்தெடுத்த அழகு என்று பொருள் கொள் ளாமற் கண்ணுக்கு விசேஷணமாக்கி, வடி-மாவடுப்போன்ற, கோலம்-அழகிய, வாள் நெடுங்கண் என்று கூறினுமாம்.

83. குறையாக வெஞ்சொற்கள் கூறினேன் கூறி
மறையாங் கெனவுரைத்த மாலை—யிறையேனு
மீயுங்கொ லென்றே யிருந்தே னெனைப்பகலு
மாயன்கட் சென்ற வரம்.

(இ—ள்.) (எம்பெருமானது ஸ்வபாவங்களை உள்ளபடி யறிந்து பேசப்புக்க), மறை-வேதங்களானவை, ஆங்கு என உரைத்த-(இன்னது, இப்படிப்பட்டது என்று அளவிட்டுச் சொல்லமாட்டாமல்) 'அது' என்று சொன்ன, மாலை-பெருமையையுடைய ஸர்வேச்வரனை, வெம் சொற்கள்-கடுஞ் சொற்களாலே, குறை ஆக-அபரிபூர்ணமாக, கூறினேன்-சொன்னேன்; கூறி-அப்படிச் சொல்லி, மாயன்கண்-ஆச்சர்யமான குணசேஷ்டிதங்களையுடைய அந்த ஸர்வேச்வரனிடத்தினின்று தோன்றி, சென்ற-வரக்கடவ, வரம்-ப்ரஸாதத்தை, கருதி-(முன்பு கவி பாடினவர்கட்கு அவன் கொடுத்துப்போவதை) நினைத்து, (நாம் பாடின கவிக்குப் பரிசிலாக), இறை ஏனும்-ஏதேனும் சிறிதாகிலும், ஈயும் கொல் என்று-தாரானோ என்று, எனை பகலும்-அனேக நாளும், இருந்தேன்-ப்ரத்யுபகாரத்தை ப்ரதீக்ஷித்துக்கொண்டிருந்தேன்; (எ—று.)

'பெருந்தமிழன் நல்லேன் பெரிது' என்று, அவனுக்குக் கவிபாடப் பெற்ற பெருமதிப்பாலே முன்பு செருக்கி வார்த்தை சொன்ன ஆழ்வார், நாய்ச்சிமாரும் எம்பெருமானும் சேர்ந்திருக்கிற பெரிய மேன்மையைக் கண்டு கவிபாடக் கூசி,' நாம் இவ்விஷயத்தைக் கவிபாடவல்லமோ? இவ்விஷயத்தைக் கவிபாட இழிவது என்ன ஸாஹஸம்!' என்று கீழ்ச்செய்த செயலுக்கு அநுதபித்துப் பேசுகிறார் இதில். விஷயத்தின் பெருமை சொல்லின் பொல்லாங்கு பச்சையை நச்சுகை என்ற இவைகளை நினைந்து அநுதபிக்கிறார். தம்முடைய செயலை இப்போது ஸாஹஸமென்று துணிந்தது, வேதங்களாலும் அவன் பெருமையைப் பேசமுடியாமையாலென்க. "நேதி நேதி" என்றும், "யதோ வாசோ நிவர்த்தந்தே, அப்ராப்ய மநஸா ஸஹ" என்றும் வேதத்தில் தானே எம்பெருமானது நிலைமை பேசமுடியா தெனக் கூறப்படுவது காண்க. மறை ஆங்கென உரைத்த மால்—வேதம் தன்னாற் பேசமுடியாது அப்பாற்பட்டவன் என்று கூறிய ஸர்வேச்வரன். ஆங்கு-பேச முடியாதபடி அப்பாற்பட்ட பொருளென்றபடி. மறையாங் கென்வுரைத்த மால் என்பதற்கு—தன் வாயிலிருந்து வருமவை யெல்லாம் வேதமென்னுமாறு பேசுமவ னென்றுமாம். 'மறையாங் கெனவுரைத்த மாலைக் குறையாக வெஞ்சொற்கள் கூறினேன்' என்ற இத்தால்—உள்ளே யிருக்கும் பொல்லாங்கை யறிய வல்லமை யற்றவரையோ (நான்) பேசப் புக்கது? ஸர்வஜ்ஞனை இங்ஙனம் மருட்டிச் செல்லுவதே நான்!! என்றவாறு.

மறை யாங்கென வுரைத்த மாலைக் கூறத் துணிந்ததே தவறு. அதிற்கு மேற் பாடின கவிக்குப் பரிசிலாக அவன் ப்ரஸாதத்தை நாடுகிறது பேத மையேயாம் என்பது இதிற் போதரும். ஆனால் இவர் ஒரு ப்ரயோஜநத் தைக் கருதிக் கவி பாடினரோ எனில்—ப்ரயோஜனத்தைக் கருதினவரல் லர். இவர் கவிபாடுவது கருதி ஒருகால் அவன் கடாட்சிக்குமாகில், அது வும் ஸ்வரூபத்துக்கும் பெரிய பேறென்றிருப்பா ரொருத்த ரென்க.

84. வரங்கருதித் தன்னை வணங்காத வன்மை
யுரங்கருதி மூக்கத் தவனை—நரங்கலந்த
சிங்கமாய்க் கீண்ட திருவ னடியிணையே
யங்கண்மா ஞாலத் தமுது.

(இ—ள்) வரம்-(தேவர்கள் பக்கல் தான் பெற்ற) வரத்தை, கருதி-பெரிதாக நினைத்து, தன்னை வணங்காத-(அந்தத் தேவர்கட்கும் காரணனை) தன்னைத் தலைகுனிதல் செய்யாத, வன்மை-மிடுக்கையும், உரம்-(இயல்பாகவுள்ள தன்) தோள் வலிமையையும், கருதி-(தனக்குப் பிறரை ஹிம்ஸிப்பதற்கு ஏற்ற கருவிகளாக) நினைத்து, மூக்கத்தவனை-(அத்தால்) செருக்கியிருந்த இரணியனை,—நரம் கலந்த சிங்கம் ஆய்-மானிடமும் சிங்கத்தன்மையும் ஒருங்கே சேர்ந்த வடிவுகொண்டு [நரசிங்கமாய் வந்தென்றபடி], கீண்ட-(மார்பைக்) கீண்டு உயிரொழியச் செய்த, திருவன்-அழகியானுடைய, அடி இணையே-உபய பாதங்களே, அம் கண் மா ஞாலத்து-அழகிய இடமகன்ற பெரிய இந்த லோகத்திலே பெறக்கூடிய, அமுது- அமிருதமாகும்; (எ—று.)

விஷயத்தின் ரஸ்யதையைப் பார்த்தால் பேச்சின் பொல்லாங்கைக் கருதி ஆறியிருக்கப் போமோ? போகாது என்னுங் கருத்துப்படத் தாம் பாடப்புக்க விஷயத்தின் ரஸ்யதையை இதிற் பேசுகிறார். தேவலோகத்திலே தேவர்கள் மாத்ரம் அநுபவிப்பதற்கு யோக்யமான அந்த அம்ருதத்திலும் வேறுபட்டது, இந்த எம்பெருமானது திருவடியமுதம்; இது அநந்ய ப்ரயோஜநர் புஜிக்கும்படி இவ்வுலகத்திலேயே ஏற்பட்ட அம்ருதமென்று அந்தத் தேவாமிருதத்தினும் வ்யாவ்ருத்தி தோன்ற அருளிச்செய்கிறார். பரஸ்பர விருத்தமான நரத்வ ஸிம்ஹத்வங்கள் சேர்ந்த வடிவு விரூபமாகத் தோற்றுகை யின்றிக்கே சேர்ப்பாலுங் கண்டசருக்கரையுஞ் சேர்ந்தாற் போலே இனிமையாய்த் தோன்றுமென்பார் 'நரங்கலந்த சிங்கமாய்க் கீண்ட திருவன்' என்றார். திருவன்-அழகியவன் என்றபடி. "அழகியான் றானே யரியுருவன்றானே," "நாரஸிம்ஹவபுச்ரீமாங்" என்பன காண்க.

'மூர்க்கத்தவ'னென்ற பாடத்துக்கு-தன் உயிர்போகும் வரையில் தான் கொண்டதை விடாப்பிடியாகக் கொண்டிருந்தவ னென்க.

85. அமுதென்றுந் தேனென்று மாழியா னென்றும்
அமுதன்று கொண்டுகந்தா னென்றும்—அமுதன்ன
சொன்மாலை யேத்தித் தொழுதேன் சொலப்பட்ட
நன்மாலை யேத்தி நவின்று.

(இ—ள்.) அமுது என்றும்-(நித்ய போக்யமான) அம்ருத மென்றும், தேன் என்றும்-(ரஸ ஸமவாயமான) தேனென்றும், ஆழியான் என்றும்-(நிரதிசய போக்யமான) திருவாழியை யுடையவனென்றும், அன்று-(தேவர்கள் தன்னைச் சரணமாக அடைந்து ப்ரார்த்தித்த) அப்போது, அமுது-அம்ருதத்தை, (திருப்பாற் கடலைக் கடைந்து), கொண்டு-(அதினின்று) எடுத்துக் கொடுத்து, உகந்தான்-('ப்ரயோஜநாந்தரத்துக்காக வேனும் நம்மை வந்து ப்ரார்த்திக்கப் பெற்றோமே!' என்று) உகப்புக் கொண்டவன், என்றும்—, சொலப்பட்ட-(வேதங்களால்) சொல்லப்பட்ட, நல் மாலை-விலக்ஷணனான திருமாலை, ஏத்தி நவின்று-(ஆதராதிசயந் தோன்றப்) புகழ்ந்து கூறி, (அவன் விஷயமாக), அமுது அன்ன-அம்ருதம் போலே இனிமையா யிருக்கிற, சொல் மாலை பாமாலைகளைக்கொண்டு, ஏத்தி-புகழ்ந்து பாடி, தொழுதேன்-(மமகாரம் அற்றமை தோன்ற) அவன் திருவடிகளில் விழுந்து வணங்கினேன்; (எ—று.)

என் சொற்கள் குறையுடையனவே யானாலும், அவற்றால் ப்ரதிபாதிக்கப்படுகின்ற ஸர்வேச்வரன் அமுதெனவும் தேனெனவும் புகழும்படி அதிசயித போக்யதையை யுடையவனாகையாலே என்னுடைய பாமாலையும் ரஸவத்தாய் விட்டதென்கிறார். எல்லா போக்யதையும் தன் போக்யதையிலே பொதிந்திருக்கையாலே அமுதென்று சொல்லப்படுகின்றான் அவன். அந்த ஸர்வேச்வரனைத் தன்னுட் பொதிந்துகொண் டிருக்கையாலே என்னுடைய சொன்மாலைகள் அமுதன்னவாயின. சொல்லப்பட்ட மால்-''ரஸோவை ஸ:'', ''ஸர்வரஸ:'', ''மத்வஉத்ஸ:'', ''த்ருதசங்கசக்ர:'' என்று ச்ருதி சாஸ்த்ரங்களாலே பேசப்பட்ட திருமால். இவ்வாழ்வாருடைய அம்ருதமும் தேனும் திருவாழியை யேந்திநிற்கு மென்பது, முதலடியிற் பெறப்பட்டது.

86. நவின்றுரைத்த நாவலர்கள் நாண்மலர்கொண் டாங்கே
பயின்றதனாற் பெற்றபய னென்கொல்—பயின்றார்தம்
மெய்த்தவத்தாற் காண்பரிய மேகமணி வண்ணனையான்
எத்தவத்தாற் காண்பன்கொ லின்று.

(இ—ள்.) நவின்று உரைத்த-(எம்பெருமானுடைய திருநாமங்களை ஆதராதிசயந் தோன்றுமாறு) பலகாலும் புகழ்ந்து கூறிய, நாவலர்கள்-சப்தார்த்த ஸம்பந்த மறிந்து கவிபாடவல்ல ப்ரயோஜநாந்தரபரர்கள், நாள் மலர் கொண்டு-அன்று மலர்ந்த மலர்களைத் தேடிக் கொணர்ந்து வந்து, ஆங்கே-அந்த ஸர்வேச்வரனிடத்திலே, பயின்று-நெருங்கி ஆச்ரயிக்க, அதனால்—, பெற்ற-(அவர்கள்) அடைந்த, பயன்-ப்ரயோஜநம், என் கொல்-ஏதோ ?; பயின்றார்.-இப்படி நெருங்கி ஸாதநாநுஷ்டாநம் பண்ணினவர், தம்-தம்முடைய, மெய் தவத்தால்-சரீரத்தை யொறுத்துச் செய்த தபஸ்ஸினாலே, காண்பு-ப்ரத்யட்சீகரிப்பதற்கு, அரிய-முடியாதவனான, மேகம் மணி வண்ணனை-மேகம் போலவும் நீலமணி போலவும் ச்ரமஹரமான திருமேனியையுடைய ஸர்வேச்வரனை, யான்-(அதிக்ஷுத்ரனான) நான், இன்று—, ஏ-எந்த, தவத்தால்-தபஸ்ஸினாலே, காண்பன்-கண்டநுபவிக்குந் தன்மையைப் பெற்றேன் ? (எ—று.) அவன் தானே காட்டக் கண்டநுபவிக்கப் பெற்றேனென்று கருத்து.

'ஸாதநாநுஷ்டாநம்பண்ணி அந்த ஸர்வேச்வரனைக் காணவேணுமென்று சரீரத்தை யொறுத்துத் தபஸ்ஸு செய்பவர்கள் அவன் தானே காட்டக் கண்ட என்னோடு ஒப்பவர்களோ'? என்கிறார் ஆழ்வா ரென்க. 'எத்தவத்தாற் காண்பன் கொலின்று' என்றதனால் அந்த ஸர்வேச்வரனைக் காண்பதற்காக என்னிடத்து ஒரு ஸாதநாநுஷ்டாநமு மில்லை; அவனே காட்டக் கண்டேனித்தனை யென்றவாறு. கொல் இரண்டும்-அசைகள். பெற்ற பயனென்கொல்-ஸாதநாநுஷ்டாநம் பண்ணிய அவர்கள் பெற்ற பயனும் ஒரு பயனோ என்று பழித்தவாறு. எம்பெருமான் ஸ்வயமே அநுக்ரஹிக்கப்பெற்ற தாம் பெற்ற பயனுக்கு அவர்கள் பெற்ற பயன் ஈடாகாது என்பதுபற்றி இவ்வாறு கூறியது. "வானக்கோனைக் கவி சொல்லவல்லேற் கினிமாறுண்டோ", "இனியாவர் நிகரகல் வானத்தே" என்பன முதலாக ஸர்வேச்வரன் தானே திருவருள் செய்யப்பெற்ற தமக்கு நிகரானவர் எங்கு மில்லையென்று நம்மாழ்வார் அருளிச் செய்வது இங்குக் காணத்தக்கது.

(இன்னும் வரும்.)

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃 ।

𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌮𑌮 𑌵𑌾𑌚𑌮𑌿𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌂
𑌸𑌂𑌜𑍀𑌵𑌯𑌤𑍍𑌯𑌖𑌿𑌲𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌃 𑌸𑍍𑌵𑌧𑌾𑌮𑍍𑌨𑌾 ।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌹𑌸𑍍𑌤𑌚𑌰𑌣𑌶𑍍𑌰𑌵𑌣𑌤𑍍𑌵𑌗𑌾𑌦𑍀𑌨𑍍
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌨𑌮𑍋 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌤𑍁𑌭𑍍𑌯𑌮𑍍 ॥

# ஸம்பாதகீயம்.

ஸ்ரீ வேதாந்த தீபிகை என்னும் இந்தப் பத்ரிகை நடைபெற ஆரம்பித்து இப்பொழுது பத்தொன்பது வர்ஷங்கள் பூர்த்தி அடைந்தன. இந்தப் பத்தொன்பது வர்ஷ காலமாக ஸ்ரீசரண்யன் ஸ்ரீ வேதாந்த தீபிகை இதைத் தனது கடாக்ஷத்தால் அநுக்ரஹித்து யதார்ஹம் தனது கைங்கர்யத்தில் அந்வயித்து வரும்படி நடப்பித்து வந்தான். இனியும், அவன் திருவுள்ளம் இருக்கும் பக்ஷத்தில், இதுவரையில் போலவே இதை அவன் அநுக்ரஹித்து வருவன் என்பதில் ஸந்தேஹமில்லை.

இந்தப் பத்ரிகையானது வேதாந்த விசாரம் செய்யும் பத்ரிகைகளுள் ஒன்று. இதில் முத்ரணம் செய்யப்பெற்று வெளிவரும் விஷயங்கள், பெரும்பாலும் வேதாந்த ஸம்பந்தங்களான விஷயங்களே. நமது முன்னோர்களால் அநுக்ரஹிக்கப்பட்டுள்ள வேதாந்த க்ரந்தங்களின் விவரணமும், அவர்களால் ஜகதுபகாரத்தை உத்தேசித்து வெளியிடப்பட்டுள்ள தத்வார்த்தங்களின் விசாரமுமே இப்பத்ரிகையில் இதுவரையில் ப்ராயேண வெளிவந்திருக்கின்றன. இனி, இதில் அம்மாதிரி கேவல சாஸ்த்ரார்த்த விசாரத்தை மாத்ரம் செய்யாமல், அதனுடன் கூட, ஸகல ஜநங்களுக்கும் கோசரமாயும் எல்லாருக்கும் நன்மையை விளைவிக்கக்கூடியவையாயும் இருக்கும் ஸாமாந்ய தர்மங்களையும், அவைகளின் அநுஷ்டாந முறைகளையும், அவைகளின்

ஆவச்யகதையையும் அடிக்கடி வற்புறுத்த வேண்டுமென்று நமது ஆப்தர்களுட் சிலர் நியமிக்கிறார்கள். அப்படிச் செய்வது இப்பொழுது ப்ராப்த காலமாக இருப்பதால், அந்த நியமநத்தை நாம் பூர்ணமாக ஆமோதிக்கிறோம்.

இக்காலத்தில், அநேக ஜநங்கள் தாப த்ரயத்தால் மிகவும் பீடிதர்களாய், மிக்க தீந தசையை அடைந்து, கஷ்டம் தாங்கமாட்டாமல் கையில் அகப்படும் வ்ருத்தியைத் தழுவி, அது போதுமான ஜீவிகையைக் கொடுக்காமல் இருக்கையிலும் அதையே பிடித்துக்கொண்டு தடுமாறி வருகிறார்கள். தேசத்தைவிட்டு தேசாந்தரம் ஓடி எப்படியாவது த்ரவ்யார்ஜ்ஜநம் செய்யவேண்டும் என்பதே அவர்களுடைய மாநஸஸில் தலையெடுத்து நிற்கின்றது. இந்த ஸங்கடத்தில், எளியவர்களை ஹிம்ஸிப்பதும், அஸத்ய வசநம் பேசி மற்றவர்களுடைய த்ரவ்யத்தை அபஹரிப்பதும், இன்னும் இவை போன்ற மற்றை அதர்மங்களும் ஸஹஜ கார்யங்களாக ஆகிவிட்டன. ஆயிரத்தில் ஒருவரிடம் கூட உண்மையான உபசாந்தியும் ஆத்ம நிக்ரஹமும் தர்ம மார்க்கத்தில் ருசியும் காணப்படவில்லை. ஜ்ஞாந ஸம்பத்தி உள்ளவர்களும், இந்த ஆதுரதையின் நடுவில் அகப்பட்டவர்களாய், கேவலம் அல்ப ஸுகத்தையே பெரிய பொருளாகத் தேடிக்கொண்டு, காம க்ரோத பரவசர்களாகி விவேக மற்றவர்கள் போலவே வர்த்தித்து வருகிறார்கள். ஸத்யம் தபஸ் முதலியவைகளின் மஹிமையே மறக்கப்பட்டுப் போய்விட்டன. த்ரவ்யம் ஒன்றின் மஹிமை மாத்ரம் எல்லாருடைய எதிரிலும் ப்ரபலமாக நின்றுகொண்டிருக்கின்றது. இந்த ஸந்தர்ப்பத்தில் கேவலம் தத்வ விவரணங்களும் சாஸ்த்ர விசாரமும் என்ன ப்ரயோஜநத்தின் பொருட்டு ஆகும்?

பூர்வ காலங்களில் நமது முன்னோர்கள், அர்த்தங்களையும் காமங்களையும் த்ருணமாக நினைத்து, ஸத்யம் முதலிய தர்மங்களை ச்ரத்தையுடன் சரிவர அநுஷ்டித்து, அவைகளின் மஹிமையினால் ஜகத்துக்கெல்லாம் சரண்யர்களாக இருந்தார்களென்று நாம் புராணாதிகளால் அறிகிறோம். அவர்களுடைய ஸந்ததியில் ஜநித்த நாம், இப்பொழுது, அந்தக் குணங்களின் ப்ரபாவங்களைக் கொஞ்சமேனும் கண்ணெடுத்துப் பாராமல், க்ஷுத்ர புருஷார்த்தங்களையே பெரியவையாக நினைத்து, அதனால் நமது ஸஹஜ சக்தியை இழந்தவர்களாய், அல்ப ஜநங்களைத் தேடி அவர்களைச் சரணம் அடையும்

படிக்கும், அவர்களுடைய ப்ரஸாதத்தை உன்முகர்களாக எதிர்பார்க்கும்படிக்கும் மிகவும் சோசநீயமான துர்த்தசையை அடைந்துவிட்டோம். இதை நினைக்கக் கடிந சித்தர்களின் மநஸ்ஸும் தபிக்கின்றதே! நமது முன்னோர்கள் ஹரிச்சந்த்ரன் முதலிய ஸத்ய ஸந்தர்கள், வஸிஷ்டர் முதலிய தபஸ்விகள் ஆகிய மஹான்களன்றோ? நமக்கு இம்மாதிரியான துர்த்தசை வரக்கூடுமோ?

“த்ருஷ்டம் க்ஷத்ரியபலம் ப்ரஹ்மதேஜோபலம் பலம்”

என்கிறபடி, ப்ர்ஹ்ம தேஜஸ்ஸன்றோ உண்மையான பலம்? அதைப் பெறுவதற்கே நாம் எல்லாரும் ஹார்த்தமான முயற்சியைச் செய்யவேண்டும். ஸத்யம், தபஸ், சாந்தி, தாந்தி, பூத தயை இவை முதலிய ஆத்ம குணங்களை நாம் உண்மையான ச்ரத்தையுடன் பயிற்சி செய்து வந்தால், நமக்கு ஸகலவிதமான பலமும் கைகூடும்; நமது தைந்யம் நிவ்ருத்தமாகும்; பகவானும் நம்மைக் கடாக்ஷித்து அநுக்ரஹிப்பன். இது நமது த்ருடமான நம்பிக்கை.

இந்த ஸந்தர்ப்பத்தில் நமது சந்தாதாரர்களுக்கும் நாம் ஒரு விஜ்ஞாபநம் செய்து கொள்ளும்படி ஸம்பவிக்கின்றது. சந்தாதாரர்களால் செலுத்தப்படும் சந்தாத் தொகையைத் தவிர்த்து வேறு ஆதாரமொன்றும் தீபிகைக்கு இல்லை என்பதை நமது சந்தாதாரர்கள் எல்லாரும் அறிவார்கள். அப்படி அறிந்திருந்தும், அவர்களுட் பலர், தம்மால் செலுத்தப்பட வேண்டிய சந்தாவைச் செலுத்தாமலே இருக்கிறார்கள். அநவதாநமே அதற்கு முக்ய காரணம் என்பதை நாம் அறிவோம். எது காரணமாக இருந்தாலும், சந்தாத் தொகையின் வஸூல் குறைவுபட்டால் தீபிகையை மேல் நடத்துவது ச்ரம ஸாத்யமாகி விடுகிறது. சென்ற வர்ஷத்தில் அம்மாதிரியான துர்த்தசை மிகவும் உக்ரமாக நேரவே, இரண்டொரு ஸமயங்களில் தீபிகையின் அதிகாரிகள், ‘தீபிகையை நிறுத்திவிடலாமோ?’ என்றும் ஆலோசித்தார்கள். அம்மாதிரியான ஆலோசனைக்கு இனி இடம் கொடாமல், சந்தாதாரர்களெல்லாரும் தங்கள் தங்கள் சந்தாவை வர்ஷ ஆரம்பத்திலேயே செலுத்தி, தீபிகையை உத்தரோத்தரம் அபிவ்ருத்தமாகும்படி செய்து வருவார்களென்று நாம் நம்புகிறோம். பத்தொன்பது வர்ஷ காலமாகத்

தீபிகையை நடத்திவிட்டு இப்பொழுது அதை நிறுத்துவது என்பது எல்லாருக்கும் அநிஷ்ட மன்றோ?

* * *

**ப்ரஜா வ்ருத்தியும் அதைத் தடுக்கும் உபாயங்களும்.**

மிகப் புத்திசாலிகளாக இருப்பவர்களும், சிற்சில ஸமயங்களில் ப்ரமத்துக்குப் பாத்ரமாவது உண்டு. ஆனால், அந்த ப்ரமம், விவேகத்தைச் சுத்தமாக மறைக்கு மளவு உக்ரமாக இருப்பதை நாம் அதிகமாக இதுவரையில் பார்த்ததில்லை. இப்பொழுது நமது தேசத்தில், பாஷாந்தராப்யாஸத்தைப் பூர்ணமாகச் செய்து, உயர்ந்த லௌகிக பதவிகளைச் சிர காலம் அலங்கரித்து, மிக வ்யபதிஷ்டர்களென்று ஸர்வ ஜநங்களாலும் கொண்டாடப்பட்டு வரும் சில பெரியோர்கள், இரண்டு மூன்று வர்ஷ காலமாக ஒரு பெரிய ப்ரமத்துக்கு ஆளாகி, மஹா ஜநங்களுக்கு விசித்ரமான ஒரு உபதேசத்தைச் செய்து வருகிறார்கள். அந்த உபதேசம் ஜகத்திற்கு மஹத்தான க்ஷோபத்தை விளைவிக்கக்கூடியதாக இருக்கிறபடியால் அதைப் பற்றி ஸாதுக்களெல்லாரும் கவலைப்படும்படி ஸம்பவிக்கின்றது.

லோகத்தில் ஜநங்களெல்லாரும் கணக்குக்கு விஞ்சி ப்ரஜா வ்ருத்தியைச் செய்கிறார்களாம். அது ஜகத்தின் க்ஷேமத்திற்கு ஆகமாட்டாதாகையால், அதைத் தடுப்பதற்கு எல்லாரும் முயலவேண்டியது அவச்யமாம். ஆனால், கேவலம் உபதேசத்தாலாவது கட்டுப்பாட்டாலாவது ராஜ சாஸநத்தின் வழியாகவாவது அது தடைபடக்கூடாததாக இருக்கிறபடியால், அதற்கு வேறு உபாயங்களையே நாம் கைப்பற்ற வேண்டுமாம். அம்மாதிரியான பல உபாயங்கள் பாச்சாத்ய தேசத்தில் அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றனவாம். அதைப் பார்த்து நாமும் அப்படியே அநுஷ்டித்து வரவேண்டுமாம். இது தான் அவர்களால் செய்யப்பட்டு வரும் உபதேசம்.

இந்த உபதேசத்தைப் பெருத்த கேட்டுக்குக் காரணமான உபதேசமென்றே நாம் நினைக்கிறோம். இது ஜநங்களிடம் பரவி அநுஷ்டாநத்துக்கு வந்து விடும் பக்ஷத்தில், அந்த க்ஷணமே நமது தேசம் நசித்து விட்டது என்று சொல்லவேண்டும். கணக்கற்ற வேறு பல அதர்மாநுஷ்டாநங்கள் நம்மை ப்ரபலமாக இப்பொழுது ஆக்ரமித்திருக்கின்றன; ஆனால், தீமையை

விளைவிப்பதில் அவை ஒன்றும் இதற்குத் துல்யமாக மாட்டாது. இது நமது நாகரிகத்தையும் செழிப்பையும் நசிப்பிப்பதுடன் நமது ஸ்வரூபத்தையும் உருமாற்றி விடுமென்பதில் ஆக்ஷேபமில்லை.

ஜகத்தில் கணக்குக்கு விஞ்சி ப்ரஜைகள் வ்ருத்தியாகி வருவதாக அவர்கள் சொல்லுகிறார்கள். அந்தக் கணக்கு யாது என்பதை நாம் அறிகிறோமில்லை. ப்ரஜைகளின் ஸ்ருஷ்டியானது ஈச்வரனுடைய கார்யம். ஒவ்வொரு ஜீவனுடைய ப்ராசீந கர்மத்துக்கு அநுகுணமாக அந்தந்த ஜீவனுக்குத் தேஹ ஸம்யோகத்தை அவ்னே செய்கிறான். அப்படிச் செய்வது கணக்குக்கு உட்பட்டிருக்கிறதா? இல்லாவிட்டால் கணக்குக்கு விஞ்சி இருக்கிறதா? என்பதைப் பரிசிலநம் செய்வதற்கு அவன் அதிகாரி ஆவானே தவிர நாம் அதற்கு அதிகாரி ஆகமாட்டோம். அந்தக் கணக்கு நம்முடைய புத்திக்கு எட்டக்கூடியதா? ஒருகால், எப்பொழுதாவது ஸ்ருஷ்டிக்கப்படும் ப்ரஜைகளுக்கு இந்தப் பூ மண்டலம் போதாமல் போனால், அப்பொழுது இந்தப் பூ மண்டலத்தைப் போன்ற ஆயிரம் வேறு மண்டலங்களை ஸ்ருஷ்டிக்க அவனுக்குச் சக்தி இருக்க, நாம் அதைப் பற்றிச் சோகப்படுவதும் அதை நிவாரணம் செய்வதற்கு உபாயங்களைத் தேடுவதும் மௌட்யத்தின் பரா காஷ்டை ஆகுமன்றோ?

அவர்கள் உபதேசிக்கும் உபாயங்கள் எப்படிப்பட்டவை என்பதைச் சற்று விசாரிப்போம். அவை, ஜகத்தின் ஸ்வபாவத்துக்கு விருத்தங்களாகவும், நினைத்த மாத்திரத்திலே மிக்க ஜுகுப்ஸையை உண்டு பண்ணக்கூடியவைகளாகவுமே இருக்கின்றன. காம போகங்களை நிரோதிப்பதிலாவது அவைகளை மிதமாகச் செய்வதிலாவது அவை ப்ரவ்ருத்திக்கவில்லை; ஆனால், காம போகங்களுக்கு நிரங்குசமானப் போக்கைக் கொடுத்துக்கொண்டே, ப்ரஜைகளை உத்பத்தியாக வொட்டாமல் மாத்ரம் அவை தடுக்கின்றன. இதற்காகப் பலவிதமான உபகர்ணங்களும் ஔஷதங்களும் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. இந்த உபகரணங்களையும் ஔஷதங்களையும் அவலம்பித்து நாம் ப்ரஜைகளின் வ்ருத்தியை த்ருப்தி கரமாகத் தடுத்துவிடுவதே அவர்களால் உபதேசிக்கப்படும் உபாயம். இது ஜநங்களின் நன்மையின் பொருட்டு ஆகுமோ? இம்மாதிரியான வ்யாபாரம் நமது சாஸ்த்ரங்களால் மஹா பாபமென்று நிஷேதிக்கப்பட்டிருக்கின்றது. ப்ரூண ஹத்யை என்று சொல்லப்படும் பாபத்தை இது ஒட்டியதன்றோ?

நமது சாஸ்த்ரத்தை நம்பாதவர்களாலும், இது மிகவும் இகழத்தகுந்த கார்யமென்றே சொல்லப்படும். இப்படி எல்லாருடைய நிந்தைக்கும் பாத்ரமாகும் வ்யாபாரத்தில், ச்ரேயஸ்ஸை விரும்பும் ஜநங்கள் ப்ரவ்ருத்திக்கக் கூடுமோ?

தவிரவும், இவைகளின் அநுஷ்டானம் வேறு பலவித தீமைகளை விளைவிக்கின்றன வென்று நாம் அபிஜ்ஞர்களின் வார்த்தையிலிருந்து அறிகிறோம். இது நடமாடும் பாச்சாத்ய தேசங்களிலுள்ள சில நிரூபகர்கள், இது பலவிடங்களில் பெருத்த அநாரோக்யத்தை ஜநிப்பித்து விட்டதென்றும், இதன் நடமாட்டத்தால் அநேக ஸாது ஜநங்கள்கூட ஸ்வைர வ்ருத்தியில் ப்ரவ்ருத்தித்து விட்டார்களென்றும், ஆகையால் இது ஜநங்களின் க்ஷேமத்திற்கும் நன்னடத்தைக்கும் பெரிய சத்ருவென்றும், தமது அநுபவத்தை ஆதாரமாகக் கொண்டு இதைப் பற்றிய தமது அபிப்ராயத்தை வெளியிட்டிருக்கிறார்கள். ருஜுவான இந்த ஸாக்ஷ்யத்தை அநாதரித்துவிட்டு, இந்த உபாயங்களை நிர்த்துஷ்டங்களென்று நாம் எவ்விதத்தில் அங்கீகரிக்கக் கூடும்? இவைகளை ஸாதுவான உபாயங்களென்று நமது பெரியோர்கள் உபதேசிக்க ப்ரவ்ருத்தித்தால் அவர்களுக்கு உந்மஸ்தகமான ப்ரமம் நேர்ந்திருக்கின்றது என்று சொல்லாமல் வேறு என்ன சொல்லக்கூடும்?

'இக்காலத்தில் ஜநிக்கும் ப்ரஜைகளுள் பல, தேஹ சக்திபற்றவைகளாகப் பலவித நோய்களுக்கு ஆளாகிப் பால்யத்திலேயே மரணமடைகின்றனவே. இதற்கு ப்ரதீகாரம் யாது?' என்று ஒரு ஆக்ஷேபம் வரக்கூடும். இதற்கு இவர்கள் கண்டு பிடித்திருக்கும் உபகரணங்களும் ஔஷதங்களும் ப்ரதீகாரமாகமாட்டா. காம போகங்களின் விஷயமாக நமது சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டுள்ள நியமங்கள் தாம் இதை நிவ்ருத்திக்கச் சக்தமானவை. காமம் என்பது ஒரு பெரிய தீ; அதற்கு ப்ரசாரம் கொடுக்கக் கொடுக்க அது மேன்மேல் வ்ருத்தியடையுமே தவிர அது சாந்தமாகமாட்டாது; அதன் அதிக ப்ரசாரம் ஜநங்களின் சக்தியைக் குறைவுபடச் செய்யக்கூடியதே. இதை ஆலோசித்தே, நமது சாஸ்த்ர கர்த்தாக்கள், இது ஸம்பந்தங்களான க்ருஹஸ்த தர்மங்களைப் பலவாறாக விதித்து, அவைகளின் அநுஷ்டானத்தில் பலவித நியமங்களையும் அவச்யம் அநுஷ்டிக்கப்பட வேண்டியவைகளாக ஏற்படுத்தி இருக்கிறார்கள். அந்த விதிகளையும் நியமங்களையும் நாம் துச்சங்களென்று அநாதரித்துவிட்டோம்; மனம்போன போக்கெல்லாம் காமாநுபவத்தில் ப்ரவ்ருத்திக்கத் துணிந்துவிட்டோம். அதனாலன்றோ இந்த ஆபத் நேர்ந்திருக்கின்றது? சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டும் நமது முன்னோர்க

ளால் ஸ்வ தர்மமென்று தீவ்ரமாக அநுஷ்டிக்கப்பட்டும் வந்துள்ள ப்ரஹ்மசர்ய வ்ரதத்தையும் போகாநுபவ விஷயமான நியமங்களையும் நாம் சரிவர அநுஷ்டித்து வந்திருந்தால், இந்தக் கஷ்டம் நமக்கு ஸம்பவித்திருக்குமோ? இவைகளை எல்லாம் பித்துப் பிடித்தவன் வார்த்தையென்று பரிஹஸித்ததன் பலமன்ருே, இப்பொழுது நேர்ந்திருக்கும் இந்த துர்த்தசை?

இந்த லோகத்தில், ஜநங்களை வருத்தும் கஷ்டங்கள் வேறு ஆயிரக் கணக்காக இருக்கின்றன. இப்பெரியோர்கள், தமது ஜ்ஞாநத்தையும் சக்தியையும் அவைகளை நிவ்ருத்திப்பதில் உபயோகப்படுத்தினர்களேயானல், அவர்கள் ஜகத்துக்கு உண்மையான உபகாரம் செய்தவராவர்; அப்போது தமக்கு ஈச்வரன் கொடுத்துள்ள ஜ்ஞாந சக்திகளுக்கும் நல்ல ப்ரயோஜநம் ஏற்படும் ; அப்படி அவர்கள் செய்வார்களோ?

## விவாஹ சட்ட கண்டநம்.

டில்லி இந்திய சட்ட சபையில் நிறைவேற்றப்பட்டு இப்பொழுது ராஜப்பிரதிநிதியின் அங்கீகாரமும் பெற்றுள்ள கந்நிகைகளின் பால்ய விவாகத் தடைச் சட்டத்தைக் கண்டித்து, தேசத்தின் பல பாகங்களிலும் கண்டநக்கூட்டங்கள் கூட்டப்பட்டு, அக்கூட்டங்களில் ஹிந்துக்களுடையவும் முக்யமாக ப்ராஹ்மணர்களுடையவும் தர்மத்தையே அடியுடன் அழிப்பதாக இருக்கிறதென்றும், இதனல் ஸநாதநமான ஆர்யமதமே அடியுடன் நசித்துப் போய்விடக்கூடுமென்றும், ஆகவே தர்மத்தை ஸம்ரக்ஷிக்கவேண்டி இச்சட்டத்தை மீறி, அதனு லேற்படக்கூடிய சிறை வாஸம் முதலிய கஷ்டங்களையும் அநுபவிக்க ப்ராஹ்மண ஸமூஹத்தினர் தயாராக வேண்டுமென்றும் தீர்மாநங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இம்மாதிரி கஷ்டங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து ஆங்காங்கு ஸநாதந தர்மிகளான ஸாத்விகர்களுக்குள் விசேஷ பரபரப்பும் அளவு கடந்த சோகமும் ஏற்பட்டிருப்பதாகத் தினசரி வர்த்தமானப் பத்திரிகைகளில் வெளியாகும் செய்திகளிலிருந்து ஏற்படுகிறது. தஞ்சை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, பாலக்காடு, சென்னை, தென்னுற்காடு முதலிய ஜில்லாக்களில் உள்ள பிரதான நகரங்களிலும் கிராமங்களிலும் இம்மாதிரி கண்டநக் கூட்டங்கள் பல ப்ராஹ்மணர்களாலும் ப்ராம்மணேதரர்களாலும் கூட்டப்பட்டு மேற்கண்டவாறு தீர்மானங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

தமிழ்தேசம் தவிர ஆந்திர தேசத்திலும் இச்சட்டத்திற்கு விரோதமான ஆக்ஷேப மேற்பட்டு அங்கும் பல ஜில்லாக்களிலும் கண்டநக் கூட்டங்கள் கூட்டப்பட்டு, சட்டத்தை மீறி யதா பூர்வம் விவாகத்தை நடத்திவருவதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. வடதேசங்களிலும் இவ்விதம் ஆக்ஷேபமிருக்கிறதென, டில்லியில் ஸமீபத்தில் நடைபெற்ற ஸநாதந தர்மமஹா நாட்டு நடவடிக்கைகள் வர்த்தமானப் பத்ரிகைகளில் வெளியானதிலிருந்து, தேச மஹா ஜனங்கள் இச்சட்டம் நிறைவேறியதில் அயர்ந்துவிடாது

வைதிக மதப்பற்றுடன் அம்மதத்தைப் பாதுகாக்க ப்ரயத்நப்படுகின்றனவெனத் தெரிகிறது.

இக்கூட்டங்களின் முழு விவரங்களையும் தீபிகையில் வெளியிட இடமில்லாமையால் இரண்டொரு முக்ய சட்டங்களைப் பற்றிய விஷயம் மாத்ரம் ஸங்க்ரஹமாக இங்கு ப்ரசுரிக்கப்படுகிறது.

## திருச்சினுப்பள்ளியில் ஸநாதநதர்மிகள் ஸங்கம்.

இந்த ராஜதானியின் வைதிக மதாநுஸாரிகளான ப்ரபல ப்ராஹ்மணர்களின் ஸங்கமொன்று சென்ற அக்டோபர் மாஸம் 19ந்தேதி திருச்சினுப்பள்ளி நேஷனல் காலேஜ் கட்டிடத்தில் ராஜாபகதூர் ஸ்ரீ ஹைதராபாத் ஜி. கிருஷ்ணமாசாரியர் ப்ரப்ருதிகளின் முயற்சியின் பேரில் நடைபெற்றது. ஸ்ரீ வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் அதில் அக்ராஸநம் வஹித்தார். ராவ் பஹதூர் எஸ். வரதாசாரியர், கே. எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், திவான்பகதூர் டி. ஆர். ராமசந்திர அய்யர், திருப்பாப்புலியூர் டி. இ. சடகோபாசாரியர், எ. வி. கோபாலாசாரியர், டி. கோதண்டராம அய்யங்கார் (தஞ்சை), டி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் (மன்னார்குடி), எம். எஸ். சேஷ அய்யங்கார் (மதுரை), எம். கே. ஆசாரியர், கே. வி. ரங்கஸ்வாமி அய்யங்கார் (ஸ்ரீரங்கம்), ராஜாபகதூர் ஹைதராபாத் ஜி. கிருஷ்ணமாசாரியர், மஹாமஹோபாத்யாய அனந்த கிருஷ்ண சாஸ்திரிகள், வி. ஆர். கணபதி அய்யர், என். நடேசய்யர் (மதுரை), எஸ். மஹாலிங்க அய்யர் (திருக்குடந்தை), யு. பி. க்ருஷ்ணமாசாரியர் முதலிய பல ப்ரமுகர்கள் பல பாகங்களிலிருந்தும் இதற்கு வந்திருந்தனர். ஸ்ரீ அஹோபில மடம் புதிய அழகிய சிங்கர் சட்டத்தைக் கண்டித்து அநுக்ரஹித்திருந்த ஸ்ரீமுகத்தை ராஜா பகதூர் ஸ்ரீகிருஷ்ணமாசாரியர் வாசித்தார்.

அக்ராஸநாதிபதி ஸ்ரீ வி.வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமி விஸ்தாரமாகச் சட்டத்தைக் கண்டித்துப் பேசி அதை நிவர்த்திக்க ப்ராஹ்மண ஸமூஹத்தினர் ப்ரயத்நப்படவேண்டிய அவசியத்தை வற்புறுத்தினர். பிறகு திவான்பகதூர் டி.ஆர். ராமசந்திர அய்யரும் இதே விஷயமாகப் பேசினர். பிறகு ஹிந்து தர்மத்தை ரக்ஷித்து, அதில் கவர்ன்மெண்டார் மனம்போனபடி தலையிடாமல் தடுக்க எங்கும் ப்ரசாரஞ் செய்யவென ஒரு ஹிந்து தர்மரக்ஷக ஸபையை யேற்படுத்தி, இதற்குக் கிளை ஸ்தாபனங்களாக ஜில்லா தாலூகா தோறும் ஸபைகளேற்படுத்த வேண்டுமென்றும், ஸநாதந தர்ம ரக்ஷணத்திற்காக வென தினசரிப் பத்ரிகைகளை யேற்படுத்துவதென்றும் தீர்மானங்கள் செய்யப்பட்டன. பிறகு ஸபைக்கு நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இதேமாதிரி ஸமீபத்தில் பெஜவாடாவிலும் ஆந்திரதேசப் பிரமுகர்களடங்கிய ஸநாதந தர்ம மகாநாடு ராஜாபகதூர் ஸ்ரீ. ஜி. கிருஷ்ணமாசாரியர் அக்ராஸனத்தில் நடைபெற்று இதே தீர்மானங்கள் செய்யப்பட்டன.

சட்டத்தை நிஷ்பலமாகச் செய்யவேண்டுமென்பதற்காகப் பாலக்காடு நூரணி அக்ராஹாரத்தில் சென்ற சில தினங்கள் முன் ஆதிருத்ரயாகம் செய்யப்பட்டு, இதில் 10 ஆயிரம் பிராமணர்களுக்குமேல் கூடி சட்டத்தை மீறி நடப்பதென்றும், இவ்விதம் ஹிந்து மதத்தில் அன்னியர் தலையிடாமல் தடுக்க நடவடிக்கை யெடுத்துக்கொள்ள வேண்டு மென்றும் தீர்மானங்கள் செய்தனர்.

சென்னைப்பட்டணத்தில் இது ஸம்பந்தமாக நவம்பர் மாஸ கடைசி வாரத்தில் ஒரு அகில இந்திய ஸநாதநதர்ம மகாநாட்டைக் கூட்டவும் ஏற்பாடாகி வருகிறது. இதற்கு எல்லா பாகங்களிலிருந்தும் ஆஸ்திக மஹா ஜனங்கள் ஏராளமாக வந்திருந்து அதைச் சிறப்பாக நடத்தி வைக்கவேண்டுமென்பது நமது பிரார்த்தனை.